மலேஷியா

தொகுதி 2 பகுதி 10

அக்டோபர் 1931


3L

[illegible]

1931'2.10

188787

764 egd. No. M. 2573.



# பாலவித்யா சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு தபாற்கூலியுள்பட ரூபா 1—8—0

சிங்கப்பூர், பினாங், தென்னாப்பிரிக்கா, ஜாவா முதலிய வெளிநாடுகளுக்கு முன்பணம் ரூபா 2—0—0

ஜீவிய சந்தா உள்நாட்டிற்கு ரூ 15. வெளிநாட்டிற்கு ரூ 20.

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

**"பாலவித்யா" தனி சஞ்சிகை அணா மூன்று**

## சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

(1) சந்தாதாரர்கள் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் ஜனவரி மாதத்திலிருந்தே கணக்கு வைக்கப்பட்டு முன் மாதத்திய சஞ்சிகைகளையெல்லாம் அனுப்புவிக்கப்படும்.

(2) நமது பத்திரிகை பிரதி இங்கிலீஷ் மாஸம் கடைசி தேதியில் வெளிவரும். பத்திரிகை வெளியான பத்து தினங்களுக்குள், அது உங்களுக்கு வந்து சேராவிட்டால், உடனே எங்களுக்கு எழுதினால் நாங்கள் கவனிப்போம் அதற்கு மேற்பட்டால் சஞ்சிகையின் கிரயத்திற்காக மூன்று அணா தபால்பில்லை வாங்கி அனுப்பினால்தான் மறுபடியும் ஸஞ்சிகை அனுப்பப்படும்

(3) சந்தாதாரர்கள் தமது சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் பண்ணிவிட்டால் இருபாலர்க்கும் ஸௌகர்யம். வி.பி.யில் அனுப்புவதாயிருந்தால் சந்தாதாரர்களுக்கு நான்கு அணா அதிகமாக செலவாகிறது. சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளிநாடுகளுக்கு வி.பி.யில் அனுப்பமுடியாது. அவர்கள் முன்பணம் மணியார்டர் செய்தாவது பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் வாங்கியனுப்பித்தாவது சந்தாதாரராகச் சேரவேண்டும்.

(4) சந்தாதாரர்கள் நமக்கு கடிதம் எழுதும்போது எப்பொழுதும் சந்தா நம்பரை எழுதவேண்டும். பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது வைத்து அனுப்பவேண்டும்.

(5) முக்கிய குறிப்பு:—நமது ஸஞ்சிகைக்கு சிறந்த கட்டுரைகளும் அரியவியாஸங்களும் மற்றும் உள்ள அரிய நீதி ஸாரங்களும் பிரசுரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படும். அப்படி அனுப்பப்படுபவைகளை ஸஞ்சிகை பிரசுரிக்கும் தேதிக்கு போதுமான காலம் முந்தியே அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

ஒரு மாதத்திற்கு, முழுப்பக்கம் ரூ. 20 அரைப் பக்கம் ரூ. [illegible]

மற்றபடி நீண்டகால விளம்பரத்திற்கு எங்கள் ஆபீஸுக்கு எழுதவும்

பாலவித்யா ஆபீஸ்,

188787

4-NOV 1931

# பால வி[illegible]

(மாதப் பத்திரிகை)

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"



| தொகுதி II | 1931ஆம் அக்டோபர்மீ பிரஜோத்பத்திஆம் அற்பிசிமீ | பகுதி X |
|---|---|---|



## "விகடத் துணுக்குகள்"

("புனிதன்" புகல்வது.)

ஒரு பள்ளிக்கூடத்தில் இன்ஸ்பெக்டர் பரீட்சை செய்தார். அப்பொழுது பின்வரும் சம்பாஷணை நடந்தது

இன்ஸ்பெக்டர்:—பிள்ளைகளே! "தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை" என்ற பழமொழியை உங்கள் உபாத்தியாயர் உங்களுக்குக் கற்பித்திருக்கிறாரா?

எல்லாப் பிள்ளைகளும் ஒரே குரலில் "ஆம்; கற்பித்திருக்கிறார்." று கத்தினர்.

இன்ஸ்:—சரி. அப் பழமொழிக்கு கருத்துரை கூறுவீர்களா?

அங்குள்ள மாணவர்களுள் ஒருவன் எழுந்து "நான் சொல்லுகிறேன் ஸார்!" என்றான்.

இன்ஸ்:—எங்கே சொல் பார்க்கலாம்.

இதற்கிடையில் ஒரு பையன் எழுந்து "என்ன ஸார்! தாயாரை கோவில் என் ... வில் ஆனால் கோவிலுக்குவேண்டிய கல், மண், சட்டம், மரம், சிலை ஒன்றும் காணோமே. வெறும் மா ளிட தேகமாகத்தானே தோன்றுகின்றாள்," என்றான்.

* * * *

உபாத்தியாயர் பூமிசாஸ்திரத்தில் கேள்விகள் கேட்டுக்கொண் டிருக்கிறார். பையன்கள் விடையளித்துக்கொண்டிருக்கின்றனர்.

உபாத்தியாயர்:—பாய்ஸ்! "இட்டலி" எங்கே இருக்கிறது தெரி யுமா?

பையன்கள் மௌனம்.

உபாத்தியாயர்:—சொல்லப்போகிறீர்களா இல்லையா?

பையன்கள் மறுபடியும் மௌனம்

உபாத்தியாயர்:—சுப்ப ராவ்! எழுந்திருந்து சொல்.

சுப்ப ராவ்:—என் வயிற்றில்தானே இருக்கிறது. மற்றும் தங்கள் வயிற்றிலும், இப் பிள்ளைகள் வயிற்றில்கூட இருக்கும். இது தானா தெரியாது.

* * * *

தகப்பனார்:—டே இட்டலி சுப்பா! என் பூனைக்குட்டியின் வா லைப் பிடித்திழுக்கிறாய்?

பையன்:—எங்கள் உபாத்தியாயர் 'பிர ஜீவன்களைக் கொன்றால் பா வம் சம்பவிக்கும்' என்றார். இந்தப் பூனை நம் வீட்டிலுள்ள எலி களைப் பிடிக்கப்போகிறது. நம்முடைய பூனை ஜீவஹிம்சை செய்தால் நமக்குத்தானே பாவம் சம்பவிக்கும். அதனால்தான் இப் பூனை எலியைப் பிடிக்கப் போகவொட்டாமல் பிடித்து இழுத் துக்கொண்டிருக்கிறேன்.

* * * *

உ

ஓம் பரப்பிரும்மணே நம:

# தியாகராஜன்

4 - NOV 1981

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் அம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு"

'திருவின் செல்வி மருவிடும் மார்பன்
மருமலர்ப் பாதம் வணங்கி வாழ்த்துதுமே."

## அத்தியாயம் 1.

19—வரு ஜனவரிமீ 12உ மாலை 5 மணி இருக்கும்.

அச்சமயம் மாயவரம் பட்டமங்கலத் தெருவில் தன் வீட்டுவாசற் திண்ணையில் வெளியில் செல்லத்தயாராய் வக் கீல் ஜகதீசய்யர் நின்றுகொண்டிருந்தார். அவ் வீட்டின் வாசற் கதவு பூட்டப்பட்டிருந்தது.

ஜகதீசய்யருக்கு குழந்தைகள் கிடையாது. அவரு டைய சம்ஸாரம் ஒரு கல்யாணத்தை உத்தேசித்துத் தன் பிறந்த வீட்டிற்குப் போயிருந்தாளாகையால், தற்சமயம் ஜகதீசய்யர் தன் வீட்டில் ஏகாங்கியாயிருந்தார்.

சற்று நேரத்திற்கெல்லாம் அவருடைய மோட்டார் வந்துசேரவே, ஜகதீசய்யர் வாசற் கதவின் பூட்டை ஒரு தரம் இழுத்துப் பார்த்துவிட்டு கீழே இறங்கி, அம் மோட் டாரில் ஏறி உட்கார்ந்துகொண்டதும், அது உடனே புறப் பட்டது.

ஜகதீசய்யர் வெளியிலிருந்து மறுபடியும் தன் வீட் டிற்குத் திரும்பி வந்தபொழுது இரவு 8 மணி இருக்கும். அவர் தன் மோட்டாரிலிருந்து கீழே இறங்கி அதை அனு ப்பிவிட்டு, தன் சட்டைப் பையிலிருந்து ஒரு சாவியை எடுத் துக்கொண்டே சென்று, வாசற்கதவின் பூட்டைத் தொட் டதும் திடுக்கிட்டார். ஏனெனில் அது திறந்திருந்தது.

"என்ன ஆச்சர்யம்! இதைப் பூட்டியது எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறதே." என்று தன் வாயைவிட்டுக் கூறியவண்ணம் அவசரத்துடன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றார். எங்கும் இருள் சூழ்ந்துகொண்டிருந்ததால், ரேழியிலிருந்த ஒரு திண்ணையைத் தடவி, ஒரு ஹரிக்கன் விளக்கையும் அதன் சமீபத்திலிருந்த ஒரு நெருப்புப் பெட்டியையும் தேடியெடுத்து பரபரப்புடன் விளக்கைக் கொளுத்தி எடுத்துக்கொண்டு, பதறும் ஹிருதயத்துடன் தன் பணப்பை, முக்கிய கடிதங்கள், இன்னும் விலையுயர்ந்த வெள்ளிப் பாத்திரங்கள் இவைகளெல்லாம் இருந்த அறையை நோக்கி ஓடினார். பாவம்! இதற்குள் கலவரத்தாலும் கவலையாலும் அவருடைய கரங்கள் நடுங்க ஆரம்பித்துவிட்டன. அவருடைய நெற்றியிலிருந்த வியர்வை முத்துமுத்தாய்த் தோன்றி அவருடைய கன்னங்களில் விழுந்துகொண்டிருந்தது. எல்லாம்போக எங்கு திருடன், சமீபத்திலேயே ஒளிந்துகொண்டிருந்து, சமயம் பார்த்து தன்மீது பாய்ந்து தன்னைக் கொன்றுவிடுவானோவென்ற பயம் ஒரு பக்கம் அவரை வதைக்கலுற்றது. கடைசியில் எப்படியோ தன் மனதை தைர்யப்படுத்திக்கொண்டு நாம் சொன்ன அவ்வறையை நன்றாய்க் கவனிக்கலானார். வெள்ளிப் பாத்திரங்களும் பணமும் இருந்த பெட்டிகள் அவர் வெளியே போகுமுன் இருந்தபடியே இருந்தனவாகையால் ஒருதரம் 'அப்பாடா!' என்று பெருமூச்செறிந்தவண்ணம், அவைகளைத் திறந்து, அவைகளிலிருந்து ஒன்றும் களவு போகவில்லையென்பதை அறிந்துகொண்டார். பிறகு அவ்வறையின் நடுவில் போடப்பட்டிருந்த ஒரு மேஜையின்மீது இருந்த தன் கைப்பெட்டியைக் கவனித்ததும் மறுபடியும் திடுக்கிட்டார். ஏனெனில் அப் பெட்டி திறந்திருந்ததுமன்றி, பல கடிதங்கள் மேஜையின்மீதும் தரையிலும் அலங்கோலமாய்க் கிடந்தன. சொல்லொணா கவலையுடன் அவைகளை ஒவ்வொன்றாய்ப் பொறுக்கிப் பார்த்துவிட்டு, கடைசியில், "சரி; அனந்தராமன் என்னிடம் கொடுத்த கடிதங்கள் போய்விட்டன.



அடாடா! என்ன அநியாயம்? அவைகளில் அடங்கியிருக்கும் விஷயம் வெளியாகுமானால், அவருடைய வீட்டின் பெயரே கெட்டுவிடுமே. சரி; இனிமேல் நான் புலம்புவதில் பிரயோஜனம் என்ன? உடனே இதைப் போலீஸாருக்குத் தெரிவிப்போம்." என்று தீர்மானித்தவராய், அவ்வறையைவிட்டு வெளியே சென்று, அவ் வீட்டின் மித்தத்தில் இறங்கி நின்றுகொண்டு,

"வாஞ்சி அய்யரே! வாஞ்சி அய்யரே." என்று உரத்த குரலில் அழைக்கவே, இடதுகைப் பக்கத்து வீட்டிலிருந்து,

"இதோ வந்துவிட்டேன்." என்ற சப்தம் வெளிக்கிளம்பியது.

சற்று நேரத்திற்கெல்லாம் வக்கீல் ஜகதீசய்யருடைய குமாஸ்தாவாகிய வாஞ்சி அய்யர் அவ் வீட்டிற்குள் ஓடிவந்தார். ஜகதீசய்யர் வக்கீல் உத்தியோகம் செய்ய ஆரம்பித்ததுமுதற்கொண்டு, நம் வாஞ்சி அய்யர் குமாஸ்தாவாயிருந்ததால் வக்கீலுக்கு அவரிடம் அளவற்ற மரியாதையும் நம்பிக்கையும் உண்டு. அவர் வந்ததும், ஜகதீசய்யர், ஆத்திரத்துடன்,

"வாஞ்சி அய்யரே! நான் இல்லாத சமயத்தில் வீட்டிற்குள் திருடன் நுழைந்து" என்று மேலே பேசுமுன், வாஞ்சி அய்யர், கவலை யொழுகும் குரலில்,

"என்ன திருடனா? அடபாபமே! ஆமாம்; என்னென்ன திருட்டுப்போயிருக்கிறது? அதைப் பார்த்தீர்களோ? இருங்கள்; முதலில் போலீஸாரை அழைத்துவரச் சொல்வோம்." என்று தன் வீட்டை நோக்கி திரும்பி நின்றுகொண்டு,

"அடே மணியா!" என்று அழைக்கவே, அவருடைய பிள்ளை மணியன் வந்ததும், அவனைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பிவிட்டு, மறுபடியும் ஜகதீசய்யரை நோக்கி,

"சரி; என்னென்ன திருட்டுப்போயிருக்கிறது?" என்று வினவினார். வக்கீல்,

"என் நண்பர் வக்கீல் அனந்தராமய்யர் இறக்குமுன் தன் புதல்வனிடம் நேரில் கொடுக்கும்பொருட்டு என்னிடம் சில கடிதங்களைக் கொடுத்தாரென்பது உமக்கே தெரியும். அவைகள் போய்விட்டன." என்று விடையளிக்கவே, வாஞ்சி அய்யர், திகைப்புற்றவர்போல்,

"அடாடா! என்ன அநியாயம்? ஆமாம்; அவைகளை யார் எதற்காக திருடியிருக்கக்கூடும்? அவைகளை வைத்துக்கொண்டு என்ன செய்யமுடியும்?" என்று வினவினார். ஜகதீசய்யர், இக் கேள்விகளுக்கு விடையளிக்காமல்,

"சரி; நான் செய்தது பிசகு. நான் அவைகளை ஏற்கனவே பம்பாயில் இருக்கும் வக்கீல் அனந்தராமய்யருடைய பிள்ளை தியாகராஜனுக்கு அனுப்பியிருக்கவேண்டும்." என்று கூறவே, வாஞ்சி அய்யர்,

"ஆமாம்; வக்கீல் அனந்தராமய்யர் அக் கடிதங்களை உங்களிடம் கொடுத்த விஷயம் தியாகராஜனுக்குத் தெரியுமோ?" என்று வினவினார். ஜகதீசய்யர்,

"நன்றாய்த் தெரியும். இன்னும் அவைகள் எவ்வளவு முக்கியமானவை என்பதும் அவனுக்குத் தெரியும். அனந்தராமய்யர் இறந்த மறுதினமே நான் அவைகளைப்பற்றி அவனுக்கு விபரமாய்க் கடிதம் எழுதினேன். அவன் கிருத்தியங்கள் செய்யும்பொருட்டு இப் பக்கம் வருவானென்றும் அப்பொழுது அவைகளை அவனிடம் நேரில் கொடுத்துவிடலாமென்றும் எதிர்பார்த்தேன். ஆனால் அவன் தனக்கு அப்பொழுது வர சௌகர்யமில்லை என்றும், தான் கிருத்தியங்களை பம்பாயிலேயே செய்துவிடுவதாகவும், அக் கடிதங்கள் என்னிடமே இருக்கட்டுமென்றும, பதில் எழுதிவிட்டான். சரி; நாம் வீணில் குழம்புவதில் பிரயோஜனமில்லை நீர் நாளை தினம் அவனுக்கு ஒரு தந்தி அடித்துவிட்டு விபரமாய் ஒரு கடிதமும் எழுதிவிடும். பிறகு ஈசன் செயல்." என்றார். வாஞ்சி அய்யர்,



"அவசியம் அப்படியே செய்கிறேன். ஆமாம்; அந்தப் பையன் இப் பக்கம் வந்து வெகுகாலம் ஆய்விட்டதே." என்று கூறவே, ஜகதீசய்யர்,

"ஆமாம்; நான் அவனை ஒருதரம்தான் பார்த்திருக்கிறேன். அப்பொழுது அவனுக்கு வயது 12 இருக்கும். இப்பொழுது அவனுக்குக் கிட்டத்தட்ட 23 வயதிருக்கவேண்டும். நீரும் அவனைப் பார்த்திருக்கமுடியாதே." என்றார். வாஞ்சி அய்யர்,

"நான் அவனைப் பார்த்தது கிடையாது.—" என்று மேலே பேசுமுன் அவ்வூர் ஸப்இன்ஸ்பெக்டர் பக்தவத்ஸலம் நாயுடு அங்கு வந்துசேர்ந்தார்.

இங்கு வக்கில் ஜகதீசய்யருடைய நண்பர் அனந்தராமய்யருடைய குடும்பத்தைப்பற்றிக் கொஞ்சம் சொல்லவேண்டியது அவசியம். அவர் இறந்து நாம் சொல்லும் சமயம் இரண்டுமாத காலம் தான் இருக்கும். அவருடைய மனைவியும் தற்சமயம் பம்பாயிலிருந்த தியாகராஜனை ஈன்ற அதே தினம் இறந்துவிட்டாள். அனந்தராமய்யருக்கு தியாகராஜனைத் தவிர மற்றொரு புதல்வன் இருந்தான். அவனும் இறந்து நாம் சொல்லும் சமயம் கிட்டத்தட்ட 10 வருஷ காலமிருக்கும். அவன் இறந்தபொழுது அவனுக்கு சுமார் 22 வயதிருக்கும். அவன் இறந்ததுமுதற்கொண்டு வக்கீல் அனந்தராமய்யர் வியக்கத்தக்கவாறு மாறிவிட்டாரென்று அவரை அறிந்த அனைவரும் சொல்லிக்கொண்டனர். ஜனங்கள் அவ் வாலிபனைப்பற்றி பலவிதம் பேசிக்கொண்டபோதிலும் வாஸ்தவமென்ன என்பது வெளிவராமல் இருந்தது. அனந்தராமய்யரும் உயிருடன் இருந்தவரையில் மாயவரத்தில் மிகவும் கியாதிபெற்ற ஒரு வக்கீலாயிருந்தார். அவருக்கு குற்றாலத்தின் சமீபத்தில் 10 வேலி நிலமும், அக் கிராமத்தில் ஒரு அழகிய பங்களாவும் உண்டு. அவருடைய மூத்த பிள்ளை அதே பங்களாவில்தான் இறந்தானென்றும், அவன் இறந்த பிறகு அனந்தராமய்யர் அதற்குள் நுழையவே இல்லை என்றும் எல்

லோரும் சொல்லிக்கொண்டனர். அதுவுமன்றி, அவர் உயிருடன் இருந்தவரையில் அப் பங்களாவை வாடகைக்கு விடவும் அவர் சம்மதிக்கவில்லை.

இப்பொழுது பம்பாயிலிருந்த தியாகராஜனைக் கவனிப்போம். அவ் வாலிபனுக்கு தற்சமயம் சுமார் 23 வயதிருக்கலாம். அவனை ஈன்ற அதே தினம் அவனுடைய தாயார் மரித்துவிட்டாளென்று ஏற்கவே கூறிவிட்டோம். ஆகவே, அனந்தராமய்யர் அக் குழந்தையை பிறர் வசம் ஒப்பிவித்து வளர்க்கவேண்டியதாய்விட்டது. (அவர் மறு விவாஹம் செய்துகொள்ள சிறிதும் இஷ்டப்படவில்லை.) அச்சமயம், பம்பாயில் நல்ல உத்தியோகத்திலிருந்த அவருடைய மாமனார் அக் குழந்தையை வளர்க்க ஒப்புக்கொள்ளவே, அது அவரிடம் கொடுக்கப்பட்டது. தியாகராஜனுக்கு வயது 13 இருக்கும்பொழுது அவன் ஒருதரம் மாயவரம் வந்ததுண்டு. அதன் பிறகு அவன் அப் பக்கம் வரவே இல்லை. ஆனால் அனந்தராமய்யர் ஒவ்வொரு வருஷமும் பம்பாய் சென்று அவனைப் பார்த்துவிட்டு வருவது வழக்கம். அவ் வாலிபனுடைய பாட்டனார் அவனை பம்பாயிலேயே படிக்கவைத்து, அவன் பி. ஏ. பரீக்ஷையில் தேறியதும், அதே ஊரில் ஒரு நல்ல உத்தியோகத்தையும் செய்துவைத்தார். தற்சமயம் அப் பாட்டனும் இறந்து சுமார் $1\frac{1}{2}$ வருஷ காலமிருக்கும். தியாகராஜன் ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டு, தன் உத்தியோகமே பெரிதென நினைத்துக்கொண்டிருந்தான். கடைசியில் அவனுடைய தந்தை அனந்தராமய்யர் இறந்ததும், வக்கீல் ஜகதீசய்யர் அவனை உடனே புறப்பட்டு வருமாறு ஒரு தந்தி அடித்தார். ஆனால் அப்பொழுதும் வர அவனுக்கு முடியாமற்போய்விட்டது. அனந்தராமய்யர் இறந்தபொழுதும், அவருடைய நிலபுலன்களை நம் வக்கீல் ஜகதீசய்யரே கவனித்து வந்தார்.

இனி நம் கதையைக் கவனிப்போம்.

ஸப்இன்ஸ்பெக்டர் பக்தவத்ஸலம் நாயுடு, நடந்த விஷயத்தை அறிந்ததும், சட்டப்பிரகாரம் தான் செய்யவேண்



டியதைச் செய்துவிட்டு, தன்னால் முடிந்தவரையில் திருடனைக் கண்டுபிடிக்கப் பிரயத்தனப்படுவதாக ஜகதீசய்யருக்கு வாக்களித்துவிட்டு, போய்விட்டார்.

---

## அத்தியாயம் 2.

அதே இரவு சுமார் $10\frac{1}{2}$ மணி இருக்கும்

குமாஸ்தா வாஞ்சிஅய்யர் தன் வீட்டின் மாடியில் ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தவண்ணம் கடிதம் ஒன்றை மிகவும் ஊக்கத்துடன் வாசித்துக்கொண்டிருந்தார். அச்சமயம் அவர் அதை மடித்திருந்ததால், அதில் கீழ்க்கண்ட வரிகள்தான் தென்பட்டன:—

“ பக்கிரிசாமி

தியாகராஜனுக்கு,

இப்பொழுது சிங்காரம் செட்டியார் சென்னை லிங்கச் செட்டித் தெருவில் —நம்பர் வீட்டில் இருக்கிறார். அவருடைய சம்ஸாரத்தின் நகைகள் முருக விலாஸின் மாடி ஹாலில் இன்னும் இருக்கின்றன. உன் இஷ்டப்படிசெய்யவும்.

K. அனந்தராமய்யர்,
12 11—19— ”

இதில் ‘ தியாகராஜனுக்கு ’ என்ற வரியும் அதன் கீழிருந்த வரிகளும் சிவப்பு மசியால் எழுதப்பட்டிருந்தன. இதை வாசித்து முடித்ததும், வாஞ்சி அய்யர் வியப்பும் திகைப்பும் அடைந்தவராய், அனந்தராமய்யருடைய கையெழுத்தின் கீழ் காணப்பட்ட தேதியை மறுபடியும் ஒருதரம் கவனித்துவிட்டு, “ சரி; இதில் சந்தேகமில்லை. அவர் இக் கடிதத்தில் எழுதியதை அவர் இறந்த தினம்தான் எழுதியிருக்கிறார். ஆகையால் அந் நகைகள் இன்னும் அதே மாடி ஹாலில்தான் இருக்கவேண்டும். இருக்கட்டும்.”

என்று ஏதோ ஒருவித தீர்மானத்திற்கு வந்தவர்போல், அக் கடிதத்தைத் மடித்து, தன் எதிரிலிருந்த மற்றொரு கடிதத்துடன் வைத்து, அவ்விரு கடிதங்களையும் ஒரு பெரிய கடித உறையில் போட்டு, அதைத் தன் பெட்டியில் ஜாக்கிரதையாய் வைத்துப் பூட்டிவிட்டு, சிந்தனையுடன் மேலும் கீழும் உலாவ ஆரம்பித்தார்.

* * * *

மறுநாட்காலை 9½ மணி இருக்கும்.

அச்சமயம், வக்கில் ஜகதீசய்யர் தன் அறையில் வர்த்தமானப் பத்திரிகை ஒன்றை வாசித்துக்கொண்டிருந்தார். சற்று நேரத்திற்கெல்லாம் அவருடைய குமாஸ்தா வாஞ்சிஅய்யர், அவ்வறைக்குள் நுழைந்து, மரியாதையுடன்,

"தியாகராஜனுக்கு தந்தி கொடுத்துவிட்டேன். இதோ ரசீது." என்று கூறியவண்ணம் ஒரு தந்தி ரசீதை தன் எஜமானரின் எதிரில் வைத்துவிட்டு, "இதோ அவனுக்கு கடிதம் எழுதிக்கொண்டு வருகிறேன்." என்று கூறியவண்ணம் பரபரப்புடன் வெளியே சென்றார். சற்று நேரத்திற்கெல்லாம் மறுபடியும் கையில் ஒரு கடிதத்துடன் வந்து, அதை ஜகதீசய்யரிடம் கொடுத்தவண்ணம்,

"தயவுசெய்து இதை வாசித்துப் பார்த்துவிட்டு சரியாயிருந்தால் கையெழுத்துப் போடுங்கள்." என்று கூறவே, ஜகதீசய்யர், அதை வாங்கி வாசித்துப் பார்த்ததும், கையெழுத்துப் போட்டுவிட்டு,

"சரி; நான் ஸ்நானம் செய்யப் போகிறேன்." என்று கூறியவண்ணம், எழுந்து பின்பக்கம் சென்றார்.

* * * *

வாஞ்சி அய்யர் கொடுத்த தந்திக்கு அதே தினம் மாலை பம்பாயிலிருந்த தியாகராஜனிடமிருந்து நடந்த அத் திருட்டைப்பற்றி போலீஸாருக்குத் தெரிவிக்கவேண்டாமென்றும், தான் அன்று விபரமாய் ஒரு கடிதம் எழுதியிருப்பதாகவும் பதில் வந்தது.



இத் தந்தியை வாசித்ததும், வக்கீல் ஜகதீசய்யர், "இதென்ன? போலீஸாருக்குத் தெரிவிக்கவேண்டாமென்று சொல்லுகிறானே. ஓஹோ! ஹோ! சரிதான்; போலீஸார் திருடர்களைக் கண்டுபிடித்து, அக் கடிதங்கள் அவர்களிடம் மாட்டிக்கொண்டால் அவைகளில் அடங்கியிருக்கும் விஷயம் வெளியாய்விடுமென்று பயப்படுகிறான்போலிருக்கிறது. அதுவும் வாஸ்தவம்தான்." என்று நினைத்து, திரும்பி, பக்கத்தில் நின்றுகொண்டிருந்த தன் குமாஸ்தாவை நோக்கி,

"வாஞ்சி அய்யரே! இத் திருட்டைப்பற்றி போலீஸாருக்குத் தெரிவிப்பதில் அவனுக்கு இஷ்டமில்லை. அவன் சொல்வதும் நியாயம்தான். சரி; நான் உடனே சென்று பக்தவத்ஸலம் நாயுடுவைப் பார்த்து வேண்டியதைச் செய்துவிட்டு வருகிறேன்." என்று கூறியவண்ணம் எழுந்து, சீக்கிரம் உடுத்திக்கொண்டு, வெளியே போய்விட்டார்.

* * * * *

அதே தினம் இரவு சுமார் 8 மணி இருக்கும்.

அச்சமயம் குமாஸ்தா வாஞ்சி அய்யர், தன் வீட்டின் மாடியிலிருந்த ஒரு அறையில் மேலும் கீழும் உலாவிக்கொண்டிருந்தார். அவர், "சரி; நான் தனிமையில் அந் நகைகளைத் தேடி எடுப்பது முடியாத காரியம். முருகவிலாஸ் மாடி ஹாலிலிருக்கும் அத்தனை பீரோக்களுக்கும் அலமாரிகளுக்கும் மறுசாவி வேண்டும். நான் அவைகளைத் திறந்து தேடிக்கொண்டிருக்கும்பொழுது கையும் களவுமாய் மாட்டிக்கொண்டால் ஆபத்தாய் முடியும். நேற்று இரவு நான் தப்பியதே தம்பிரான் புண்யம். இக் காரியத்தை சபாபதி பிள்ளை போன்ற பேர்வழிகளால்தான் செய்யமுடியும். சரி; வேறு வழி இல்லை. அவர்களையும் சேர்த்துக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால்—" என்று மேலே யோசிக்குமுன் அவ் வீட்டிற்கெதிரில் வண்டி ஒன்று வந்து நிற்கும் சப்தம் கேட்கவே, ஆவலுடன் சென்று ஒரு ஜன்னலின் வழியாக வெளியே எட்டிப்பார்த்தார். அச்சமயம், வீதியில் நின்றுகொண்டிருந்த ஒரு வண்டியிலிரு

ந்து அவருடைய பிள்ளை மணியன் கீழே இறங்கிக்கொண்டிருந்தான். மறுநிமிஷம் அதிலிருந்து சுமார் 35 வயதுள்ள மற்றொருவனும் இறங்கவே, வாஞ்சி அய்யர், "பேஷ்! வந்துவிட்டான்," என்று கூறியவண்ணம் கீழே ஓடினார். இதற்குள் வண்டியிலிருந்து இறங்கிய அவ் விருவரும் வீட்டிற்குள் வந்துவிட்டார்கள். அம் மற்றொருவனுடைய முகத்தைப் பார்த்ததுமே அவன் பரம அயோக்கியனென்று எளிதில் தெரிந்துகொள்ளக்கூடும். அவனுடைய வலது கரத்தில் தங்க வீரச்சங்கிலி ஒன்று பளபளவென்று ஜ்வலித்துக்கொண்டிருந்தது. அவனைக் கண்டதும், வாஞ்சி அய்யர், சிரித்துக்கொண்டே,

"சபாபதி பிள்ளைவாள்! வாரும். மாடிக்குப் போவோம்." என்றார். உடனே இருவரும் மாடிக்குச் சென்று உட்கார்ந்துகொண்டதும், சபாபதி பிள்ளை, ஆவலுடன்,

"ஐயரே! என்ன சமாசாரம்? காயா? பழமா?" என்று வினவ, வாஞ்சி அய்யர்,

"காயாயிருந்தால் என் பிள்ளையை 8 தரம் உம்முடைய வீட்டிற்கு அனுப்புவேனா? ஆமாம்; நீர் எங்கே போயிருந்தீர்?" என்று விசாரித்தார். சபாபதி பிள்ளை,

"நான் திடீரென்று சிதம்பரம் போகவேண்டியதாய் விட்டது. அதிருக்கட்டும்; என்ன சமாசாரம்?" என்று மறுபடியும் அடக்க இயலாத ஆவலுடன் கேட்க, வாஞ்சி அய்யர், தன் சட்டைப்பையிலிருந்து, அவர் அதற்கு முந்திய தினம் இரவு வாசித்துக்கொண்டிருந்த, அக் கடிதத்தை எடுத்துப் பிரித்துக் காண்பித்தவண்ணம்,

"இதோ பாரும்." என்று கூறவே, சபாபதி பிள்ளை, தன் இடத்திலிருந்து தாவி எழுந்து, முகத்தில் ஆனந்தம் கூத்தாட தன் வலது கரத்தை ஆவலுடன் நீட்டியவண்ணம்,

"ஸ்வாமி! இதுதான். பேஷ்! எல்லாம் ஒழுங்காய் நடந்ததோ இல்லையோ?" என்று வினவினான். ஆனால் அவன் தன் கரத்தை அவ்வளவு ஆவலுடன் நீட்டியபோதி



லும், வாஞ்சி அய்யர், அக் கடிதங்களை அவனிடம் கொடுக்காமல், அவைகளை மறுபடியும் தன் சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டு,

"அதை ஏன் கேட்கிறாய்? நேற்று நான் தப்பியது தம்பிரான் புண்யம்." என்றார்.

அவ்விதம் நம் குமாஸ்தா அக் கடிதங்களை உடனே தன்னிடம் கொடுக்காததைக் கண்டதும் சபாபதி பிள்ளையின் முகம் வாட்டமுற்றது. ஆனாலும், தன் விசனத்தையும் கவலையையும சீக்கிரம் மறைததுக்கொண்டு,

"அடபாபமே! என்ன நடந்தது?" என்று வினவினான். வாஞ்சி அய்யர், தாழ்ந்த குரலில்,

"வக்கீலுடைய ஸம்ஸாரம் நேற்றுத்தான் தன் பிறநத வீட்டிற்குப் போனாள். ஆகையால் நேற்றுவரையில் நான் ஒன்றும் செய்யமுடியவில்லை. அவ் வீட்டின் வாசற்கதவுக்கு ஏற்கனவே என்னிடம் சாவி இருந்தது. இன்னும் அக் கடிதங்களை அவர் வைத்திருந்த அவருடைய கைப்பெட்டியின் சாவியும் எப்பொழுதும் அவருடைய மேஜையின்மேல்தான் இருக்கும். ஆகையால் நான் இதில் சிரமமே இருக்காதென்று நினைத்தேன். ஆனால் நேற்று இரவு நான் அவருடைய அறைக்குள் நுழைந்து பார்த்தபொழுது அக் கைப்பெட்டியின் சாவி அவ்விடத்தில் இல்லை. நான் ஒருமணிநேரம் தேடியபிறகுதான் அது அகப்பட்டது. கடைசியில் நான் அப் பெட்டியைத் திறந்து, இக் கடிதங்களைத் தேடியெடுத்துக்கொண்டு, அதிலிருந்து நான் எடுத்த மற்ற கடிதங்களை அதற்குள் மறுபடியும் வைத்துக்கொண்டிருக்கையில், வக்கீலுடைய மோட்டார் வரும் சப்தம் கேட்டதால், நான் அப் பெட்டியையும் வாசற் கதவையும் மறுபடியும் பூட்டாமல் ஓடி வந்துவிட்டேன். இதனால்தான், இக் கடிதங்கள் திருட்டுப்போனது உடனே வெளியாய்விட்டது. அப்படியில்லாமல், நான் கீழே கிடந்த அக் கடிதங்களை மறுபடியும் அப் பெட்டியில் வைத்துவிட்டு, அதையும் வாசற் கதவையும் பூட்டிக்கொண்டு வந்திருந்

தால், இதை வக்கீல் இப்பொழுது கவனிக்க நியாயமே இல்லை." என்றார். இதைக் கேட்டதும், சபாபதி பிள்ளை, திகைப்புற்று,

"அடாடா! ஆனால் இதை அவர் போலீஸாருக்கு—" என்று மேலே பேசுமுன், வாஞ்சி அய்யர்,

"போலீஸாரைப்பற்றி நமக்கு இப்பொழுது கவலை இல்லை. ஏனெனில் நாங்கள் உடனே இதைப் போலீஸாருக்குத் தெரிவித்துவிட்டு, இன்று காலமே பம்பாயிலிருக்கும் அந்தப் பையன் தியாகராஜனுக்கும் தந்தியின் மூலம் தெரிவித்தோம். ஆனால் அந்தப் பையன் இதைப் போலீஸாருக்குத் தெரிவிக்கவேண்டாமென்று பதில் தந்தி கொடுத்துவிட்டான். ஏற்கனவே வக்கீல், ஸப் இன்ஸ்பெக்டர் பக்தவத்ஸலம் நாயுடுவைப் பார்த்து, அவரை சரிப்படுத்தும்பொருட்டு போய்விட்டார்." என்றார். சபாபதி பிள்ளை,

"பேஷ்! ஆமாம்; நீர் இதைச் செய்திருப்பீரென்ற சந்தேகம் வக்கீலுக்கு—" என்று மேலே பேசுமுன், வாஞ்சி அய்யர்,

"அவர் என்னை சந்தேகிப்பாரென்று எனக்குத் தோன்றினால், நான் இதைச் செய்ய ஒப்புக்கொள்வேனா? இப்பொழுது நான் அவரிடம் இதைச் செய்தது நான்தானென்று ஒப்புக்கொண்டபோதிலும் அவர் நம்பமாட்டார்." என்றார்.

சபாபதி பிள்ளை :—பேஷ்! சரி; இக் கடிதங்களை நீர் தேடி எடுத்து என்னிடம் கொடுத்தால், உமக்கு நான் தருவதாக வாக்களித்த 200 ரூபாய் பணத்தை இதோ கொண்டுவந்திருக்கிறேன். தயவுசெய்து அதை வாங்கிக்கொண்டு அக் கடிதங்களை என்னிடம் கொடும்.

வாஞ்சி அய்யர் :—அவசரப்படாதேயும். ஆமாம்; மாங்காய் அடிக்க தேங்காய் விழுந்தது என்று ஒரு வசனமுண்டே! அது உமக்குத் தெரியுமோ?



சபாபதி பிள்ளை:—(வியப்புற்று, ஆவலுடன்) என்ன? தேங்காயா? நீர் சொல்வது எனக்குப் புரியவில்லையே.

வாஞ்சி அய்யர் :—சரி; அதிருக்கட்டும். உன் நண்பன் சிங்காரவேலு, வக்கீல் அனந்தராமய்யர் அவர் இறந்த தினம் தன் நண்பர் ஜகதீசய்யரிடம் என்னசொன்னதாகச் சொன்னான்? அதை மறுபடியும் சொல். கேட்போம்.

சபாபதி பிள்ளை :—அவர் ஜகதீசய்யரிடம் ஒரு பெரிய கடித உறையைக் கொடுத்து, அதற்குள் சில முக்கியமான கடிதங்கள் இருப்பதாகவும், அவைகளில் அடங்கியிருக்கும் விஷயம் வெளியானால் தன் குடும்பத்திற்கு மிகவும் அபக்கியாதி வந்துவிடுமாகையால் அவைகளை அவர் (ஜகதீசய்யர்) மிகவும் ஜாக்கிரதையாக வைத்துக்கொண்டிருந்து, தான் இறந்துவிட்டால் தன் புதல்வன் பம்பாயிலிருந்து வந்ததும் அவனிடம் அதை நேரில் கொடுக்குமாறும் சொன்னாராம்.

வாஞ்சி அய்யர் :—(சிரித்துக்கொண்டே) ஆனால் பக்கிரிசாமி அக் கிழவியிடமிருந்து பிடுங்கிக்கொண்டுவந்த ராஜலெக்ஷ்மியின் நகைகளைப்பற்றி அவர் ஒன்றும் சொல்லவில்லையோ?

சபாபதி பிள்ளை :—(மேலும் வியப்புற்று) இல்லை. ஏன் கேட்கிறீர்?

வாஞ்சி அய்யர் :—பேஷ்! வக்கீல் ஜகதீசய்யருக்கு, அம்மாடி ஹாலில், அந் நகைகள் இருப்பது தெரியாதென்பது நிச்சயம். சபாபதி பிள்ளைவாள்! நாம் கொஞ்சம் சிரமப்பட்டால் நமக்கு அந் நகைகளும் கிடைக்கும்.

சபாபதி பிள்ளை :—(ஆவலுடன்) என்ன சொன்னீர்? நகைகளும் கிடைக்குமா?

வாஞ்சி அய்யர்:—கண்டிப்பாய்க் கிடைக்கும். வக்கீல் அனந்தராமய்யர் தன் நண்பரிடம் கொடுத்த அக் கடித உறைக்குள் உன் தோழன் பக்கிரிசாமியும் அவரு

டைய மூத்த பிள்ளை ராமுவும் எழுதிய கடிதங்கள் இரண்டும் இருந்தன. அதில் பக்கிரிசாமி எழுதிக் கொடுத்த கடிதத்தில், வக்கீல் அனந்தராமய்யர், தன் கரத்தினால், தற்சமயம் பம்பாயிலிருக்கும் தன் இரண்டாவது பிள்ளை தியாகராஜனுக்கு சில வரிகள் எழுதியிருக்கிறார். இதோபார். (என்று கூறியவண்ணம் அக் கடிதத்தை மறுபடியும் எடுத்துப் பிரித்துக் காண்பித்தார்.)

சபாபதி பிள்ளை :—(அனந்தராமய்யர் தன் புதல்வனுக்கு எழுதியிருந்த வாக்கியங்களை வாசித்துவிட்டு, தன் வியப்பின் மிகுதியால் பேசவும் சக்தியற்றவன்போல் கொஞ்சநேரம் நம் குமாஸ்தாவை உற்றுநோக்கியவண்ணம் இருந்துவிட்டு, பிறகு ஆவலுடன்) ஐயரே! நாம் இந் நகைகளையும் அடித்துவிடவேண்டும்.

வாஞ்சி அய்யர் :—அதை நீர் சொல்லவேண்டுமா? ஆனால் இக் கார்யத்தை நீங்கள்தான் செய்யவேண்டும். என்னால் ஒன்றும் முடியாது.

சபாபதி பிள்ளை :—நீர் ஒன்றும் செய்யவேண்டாம். நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம். ஆனால் அனந்தராமய்யர் அந் நகைகள் அந்த பங்களாவின் மாடி ஹாலில் இருக்கின்றனவென்று எழுதியிருக்கிறாரேயொழிய அதில் எந்த இடத்தில் இருக்கின்றனவென்று எழுதவில்லையே. ஆமாம்; நீர் சமீபத்தில் அந்த பங்களாவுக்குப் போனீரோ?

வாஞ்சி அய்யர் :—போனமாதங்கூடப் போனேன். அந்த ஹாலையும் திறந்து பார்த்தேன். அதில் பல பீரோக்களும் அலமாரிகளும் இருக்கின்றன. அவைகளை எல்லாம் நாம்—

சபாபதி பிள்ளை :—அவைகளுடைய சாவிகள் உம்முடைய வக்கீலிடம் இல்லையோ?

வாஞ்சி அய்யர் :—இருக்கின்றனவென்பது எனக்குத் தெரியும். ஆனால் அவைகளை அவர் எங்கே வைத்திருக்கி



றாரென்று தெரியவில்லை. நான் இன்று முழுமையும் என்னால் முடிந்தவரையில் பார்த்தேன். நான் அவைகள் எங்கே என்று அவரைக் (ஜகதீசய்யரை) கேட்பது சந்தேகத்திற்கிடம். ஆகையால் நாம் மறு சாவி—

சபாபதி பிள்ளை :—அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். என் நண்பன் சிங்காரவேலு மறு சாவி போடுவதில் மிகவும் அனுபவமுள்ளவன். எப்பொழுதும் அவனிடம் பல கொத்துச்சாவிகள் உண்டு. அதில் எப்பேர்ப்பட்ட பூட்டுக்கும் சாவி இருக்கும்.

வாஞ்சி அய்யர் :—பேஷ்! அப்படியா?

சபாபதி பிள்ளை :—ஆமாம்; ஆனால் நாம் அவசியமாய் காலதாமதம் செய்யக்கூடாது. ஏனென்றால், பம்பாயிலிருக்கும் அந்தப் பையன் (தியாகராஜன்) அத் தந்தியைப் பார்த்ததும் ஒருக்கால் புறப்பட்டு வந்துவிடுவார். அடாடா! நீர் செய்தது பிசகு. அவனுக்கு தந்தி நீர்தானே கொடுத்தீர்?

வாஞ்சி அய்யர் :—ஆமாம்.

சபாபதி பிள்ளை :—நீர் ஏன் கொடுத்தீர்? வக்கீலிடம் கொடுத்துவிட்டதாகச் சொல்லி சும்மாயிருந்திருக்கவேண்டும்.

வாஞ்சி அய்யர் :—அசடே! அவர் ரசீது எங்கே யென்று கேட்டால் நான் என்ன செய்யமுடியும்? பிறகு அது சந்தேகத்திற்கிடமல்லவோ? ஆனால் அந்தப் பையன் நீ சொல்வதுபோல் ஓடிவரமாட்டான். அவனுக்கும் இந் நகைகள் அந்த மாடியிலிருப்பது தெரியாதென்றே தோன்றுகிறது. தெரிந்திருந்தால் அனந்தராமய்யர் அக் கடிதத்தில் அப்படி எழுதவேண்டியது அனாவசியம். அதுவுமன்றி, அவன் வருவதாயிருந்தால் தந்தியில் வருகிறேனென்று எழுதியிருப்பான். சரி; அதிருக்கட்டும். அந் நகைகள் நம்மிடம் அகப்பட்டுவிட்டால், நாம் எப்படிப் பங்கு பிரித்துக்கொள்வதென்பதை முதலில் தீர்மானித்துக்கொள்ளவேண்டும். பிறகு

சண்டை போடுவது பிசகு. அவைகள் குறைந்தது 60000ரூபாய் பொருமென்று இக் கடிதங்களிலிருந்தே தெரிகிறது. சபாபதி பிள்ளைவாள்! இப்பொழுதே சொல்லிவிடுகிறேன். அவைகளை விற்கும் காரியத்தையும் நீங்கள்தான் செய்யவேண்டும்.

சபாபதி பிள்ளை :—அதில் கஷ்டமே இல்லை. அதையும் நாங்களே செய்கிறோம்

வாஞ்சி அய்யர் :—சரி ; நீங்கள் அவைகளை 60000ரூபாய்க்கு விற்றால் எனக்கு 30000ரூ. கொடுத்துவிடவேண்டும்.

சபாபதி பிள்ளை :—(வியப்புற்று) ஸ்வாமி! அதெப்படி முடியும்? நாம் இருப்பது 4 பேர். நீரோ ஒன்றும் செய்யமாட்டேனென்று சொல்கிறீர். நானும் அவ்வூருக்கு (குற்றாலத்துக்கு) தைரியமாய் போவதற்கில்லை. ஆகவே, இதில் நாம் என் நண்பர்கள் சாரங்கபாணியையும் சிங்காரவேலுவையும் தான் நம்பவேண்டும்.

வாஞ்சி அய்யர் :—வாஸ்தவம். ஆனால் நீர் அவர்களுக்கு பங்கு கொடுக்காமலே எதைச் செய்யச் சொன்னாலும் அவர்கள் செய்வார்களென்பது எனக்குத் தெரியும்.

சபாபதி பிள்ளை :—(மேலும் வியப்புற்று) ஸ்வாமி! பங்கில்லாமல் அவர்கள் ஏன்—

வாஞ்சி அய்யர் :—சபாபதி பிள்ளைவாள்! நான் பிறந்து வளர்ந்த ஊர் கும்பகோணம். கும்பகோணத்தானை ஏமாற்றுவது முடியாத காரியம். இந்த சாரங்கபாணியும் சிங்காரவேலுவும் சேர்ந்துகொண்டு ரங்கூனில் ஒரு கொலை செய்திருக்கிறார்கள். அதைச் செய்தது அவர்கள்தானென்று எளிதில் ரூபிக்கக்கூடிய சில கடிதங்கள் உம்மிடம் இருக்கின்றன. இக் காரணத்தால்தான் அவ் விருவரும் நீர் சொன்னபடியெல்லாம் செய்கிறார்கள். ஆனால் அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. நீர் என்ன வேண்டுமானாலும் செய்யும். எனக்கு 30000 ரூபாய் கிடைக்கவேண்டும்.



இதைக் கேட்டதும், சபாபதி பிள்ளை திகைப்புற்று சுமார் இரண்டு நிமிஷ நேரம் வாஞ்சி அய்யரை உற்று நோக்கியவண்ணமிருந்தான். பிறகு,

"சரி; அப்படியே செய்கிறோம். இப்பொழுது உம்முடைய 200 ரூபாய் பணத்தை வாங்கிக்கொண்டு அக் கடிதங்களை என்னிடம் கொடும்." என்றான். ஆனால் கும்பகோணத்தில் பிறந்து வளர்ந்த நம் வாஞ்சி அய்யர்,

"பிள்ளைவாள்! தயவுசெய்து மன்னிக்கவேண்டும். காலம் கலிகாலம்; ஒருவரை ஒருவர் நம்புவதற்கில்லை. ஆகையால், நீங்கள் அந் நகைகளைத் தேடி எடுத்து, அவைகளை விற்று, எனக்குக் கிடைக்கவேண்டிய 30000 ரூபாய் என்னிடம் வந்துசேரும்வரையில், இக்கடிதங்கள் என்னிடமே இருக்கட்டும்." என்றார்.

இதைக் கேட்டதும் சபாபதி பிள்ளை திடுக்கிட்டான். உடனே அவனுடைய முகம் பயங்கரமாய் மாறியது. ஆனாலும் தன் கோப வெறியை மிகவும் மெச்சத்தக்கவாறு அடக்கிக்கொண்டு, சுமார் கால் மணி நேரம் சிந்தித்துவிட்டு, கடைசியில் அதற்கு ஒப்புக்கொண்டான்.

## அத்தியாயம் 3.

16உ காலை சுமார் 9 மணி இருக்கும்.

அச்சமயம், குமாஸ்தா வாஞ்சி அய்யர் வக்கில் ஜகதீசய்யருடைய வீட்டுத் திண்ணையில் சில கக்ஷிக்காரர்களுடைய மத்தியில் உட்கார்ந்துகொண்டிருந்தார். சற்று நேரத்திற்கெல்லாம் தபால்காரன் வந்து ஒரு கடிதத்தை கொடுக்கவே, அவர் அதைப் பிரித்து, ஆவலுடன் கீழ்க்கண்டவாறு வாசித்தார் :—

"டாடர் (பாம்பே)
13—1—19—.

வக்கில் ஜகதீசய்யர் அவர்களுக்கு, தியாகராஜன் அநேக கோடி சாஷ்டாங்க நமஸ்காரம். உபய க்ஷேமம்.

நான் இன்று கொடுத்த தந்தி உங்களுக்கு ஏற்கனவே கிடைத்திருக்குமென்று நம்புகிறேன்.

அக் கடிதங்கள் களவுபோனதால் நமக்கு எவ்வித ஆபத்தும் வருமென்று எனக்குத் தோன்றவில்லை. அவைகளைத் திருடியவன் அவைகளை வைத்துக்கொண்டு ஒன்றும் செய்யமுடியாது. ஏனென்றால் அவைகளை அவன் திருட இரு காரணங்கள்தான் இருக்கமுடியும். முதலாவது: அவைகளில் ஒன்றை அவனே எழுதி என் தந்தையிடம் கொடுத்திருக்கவேண்டும். இன்னும் அக் கடிதம் பிறர்வசம் இருக்கும்வரையில் தான் கவலையற்று இருக்கமுடியாதென்று நினைத்து அவன் அவைகளைக் களவாடியிருக்கவேண்டும். அப்படியிருக்கும்பக்ஷத்தில், அவன் அவைகளைத் திருடியதும் உடனே கிழித்து எறிந்திருப்பானென்பது நிச்சயம். இரண்டாவது: அவனுக்கு அக் கடிதங்கள் உங்களிடம் இருந்தது தெரிந்திருந்து, அவைகளைத் தான் களவாடி வைத்துக்கொண்டு, என் குடும்பத்தாரை (அதில் இப்பொழுது என்னைத்தவிர வேறு ஒருவரும் பாக்கி இல்லை) பயமுறுத்தினால் அவர்கள், தங்களுடைய குடும்பத்திற்கு அவமானம் வந்துவிடுமென்று பயந்து, அவன் கேட்கும்பொழுதெல்லாம் பணம் கொடுப்பார்களென்று நம்பி இவ்விதம் அவைகளைத் திருடியிருக்கவேண்டும். அப்படி இருக்கும்பக்ஷத்தில், தற்சமயம் என் குடும்பத்தைச் சேர்ந்தவன் நான் ஒருவனேயாகையால், அவன் முதலில் என்னிடம் வருவானேயொழிய, அக் கடிதங்களில் அடங்கியிருக்கும் விஷயத்தை என்னைப் பார்க்கும்வரையில் வெளியிடமாட்டானென்பது திண்ணம். ஆகையால் நாம் கவலைப்படவேண்டியது அனாவசியமென்றே எனக்குத் தோன்றுகிறது. ஆனால், நீங்கள் இத் திருட்டைப்பற்றி போலீஸாருக்குத் தெரிவித்தால், அவர்கள் எப்படியாவது திருடனைக் கண்டுபிடித்துவிடுவார்கள். உடனே அக் கடிதங்களில் அடங்கியிருக்கும் விஷயமெல்லாம் வெளியாய்விடும். நீங்களே இதை யோசித்து இத் திருட்டைப்பற்றி போலீஸாருக்குத் தெரிவித்திருக்கமாட்டீர்களென்று நம்புகிறேன். அப்படியே தெரி



வித்திருந்தபோதிலும், அவர்கள் அத் திருடனைப் பிடிக்க மேலும் பிரயத்தனப்படாமலிருக்கவேண்டிய ஏற்பாடுகளை இதற்குள் செய்திருப்பீர்களென்று நம்புகிறேன்.

என் குடும்பத்திற்கு அபக்கியாதியையும் அவமானத்தையும் கொண்டுவரக்கூடிய அப்பேர்ப்பட்ட விஷயம் என்ன இருக்கக்கூடுமென்பது எனக்குப் புரியவில்லை. போனவருஷம் என் தந்தை இங்கு வந்திருந்தபொழுதும், அதைப்பற்றி என்னிடம் சொல்லாமலிருந்தது எனக்கு ஆச்சர்யமாயிருக்கிறது. இவ்விதம் அவரிடம் அக் கடிதங்கள் இருந்தது, நீங்கள் அவர் இறந்ததும் எனக்கு அவைகளைப்பற்றி எழுதியபிறகுதான் எனக்குத் தெரியும்.

முடியுமானால் மார்ச்சு மாதம் நான் அப்பக்கம் வரலாமென்று இருக்கிறேன்.

இன்னும் குற்றாலத்திலிருக்கும் முருக விலாஸை அனாவசியமாய் குடியின்றி வைப்பதில் எனக்கு இஷ்டமில்லையாகையால் அதில் சீக்கிரம் குடிவைக்க தயவுசெய்து ஏற்பாடு செய்யவும். ஆனால் அதன் மாடியில் நம்முடைய சாமான்கள் ஏராளமாயிருப்பதால் அதுமட்டும் நம் வசத்திலேயே இருக்கட்டும்.

வேறு விசேஷமில்லை, தயவுசெய்து விபரமாய் பதில் எழுதவும்.

வேணும், நமஸ்காரம்,

தியாகராஜன்.”

இக்கடிதத்தை வாசித்ததும் வாஞ்சி அய்யருக்கு உண்டான சந்தோஷத்திற்கு அளவில்லை. அவர், “பேஷ்! இனிமேல் இவனைப்பற்றி நாம் கவலைப்படவேண்டியது அனாவசியம். ஆனாலும்—” என்று அவர் மேலே யோசிக்குமுன், அவருடைய நண்பன் சபாபதி பிள்ளை அங்கு வந்து சேரவே, அவர், ஆவலுடன் எழுந்து, தன்னுடன் இருந்த கக்ஷிக்காரர்களிடம் தான் சீக்கிரம் வருவதாகச் சொல்லிவிட்டு, சபாபதி பிள்ளையை அழைத்துக்கொண்டு, அவசரத்துடன் தன் வீட்டிற்குச் சென்றார். இருவரும் அவ்வீட்டின் மாடிக்குச் சென்றதும், வாஞ்சி அய்யர்,

"பிள்ளைவாள்! நீர் போன சமாசாரமென்ன?" என்று வினவ, சபாபதி பிள்ளை, விசனத்துடன்,

"ஒன்றும் திருப்திகரமாயில்லை. நான் முந்தாநாள் தஞ்சாவூர் போனபொழுது, சாரங்கபாணியும் சிங்காரவேலுவும் ஊரிலில்லை. அவர்கள் காரியமாக பூதலூர் போயிருந்தார்கள். பிறகு நேற்று இரவுதான் திரும்பிவந்தார்கள். ஆகையால் ஒன்றும் செய்யமுடியவில்லை. சரி; பம்பாயிலிருந்து கடிதம் வந்ததோ?" என்று ஆவலுடன் வினவினான். வாஞ்சி அய்யர், தியாகராஜனுடைய கடிதத்தைக் காண்பித்து,

"வந்தது. பிள்ளைவாள்! நம்முடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். அந்தப் பையன் (தியாகராஜன்) இப்பொழுது வரப்போகிறதில்லை. இன்னும், அவனுக்கு அக் கடிதங்களைப்பற்றியாவது நகைகளைப்பற்றியாவது ஒன்றுமே தெரியாது. எல்லாம்போக, அவன் குற்றாலத்திலிருக்கும் அந்த பங்களாவை சீக்கிரம் வாடகைக்குவிட ஏற்பாடு செய்யச் சொல்லியிருக்கிறான். உடனே நீர் அதை எடுத்துக்கொள்ளவேண்டும். நான் சிபார்சு செய்தால் அது கண்டிப்பாய் உமக்குக் கிடைக்கும். நீர் அதை எடுத்துக் கொண்டுவிட்டால், நீங்கள் அந்த மாடி முழுமையும் சாவகாசமாய்த் தேடி அந் நகைகளை எடுத்துவிடலாம்." என்றார். சபாபதி பிள்ளை,

"நீர் சொல்வது வாஸ்தவம். ஆனால் அதை நான் எடுத்துக்கொள்ளமுடியாது. ஏனென்றால் அந்த பங்களாவில் அக் கிழவன் முருகன் இன்னும் இருக்கிறானென்று நீர் சொல்லுகிறீர். நான் என் நண்பன் பக்கிரிசாமியுடன் அவ் வீட்டிற்கு அடிக்கடி போயிருக்கிறேன். அவன் என்னைப் பார்த்திருக்கிறான். ஆகையால் அவன் என்னை மறுபடியும் பார்த்ததும் சந்தேகிக்கக்கூடும். ஆனால்—" என்று மேலே பேசுமுன், வாஞ்சி அய்யர்,

"அக் கிழவன் உம்மைப் பார்த்து 10 வருஷங்களுக்குமேல் இருக்குமே. இப்பொழுது உம்மைப் பார்த்



தால் அவனுக்கு அடையாளம் புரியுமா?" என்று வினவினார். சபாபதி பிள்ளை,

"நன்றாய்ப் புரியும். அக் கிழவன் லேசானவனல்ல. நாம் ஏன் அனாவசியமாய் அபாயத்தை வரவழைத்துக் கொள்ளவேண்டும். நான் இல்லாவிட்டால் என் நண்பர்களில் சாரங்கபாணியாவது சிங்காரவேலுவாவது அதை வாடகைக்கு எடுத்துக்கொள்ளட்டுமே." என்று கூறவே, வாஞ்சி அய்யர்,

"பேஷ்! அதுவும் நல்ல யோசனைதான். சரி; நீர் இங்கேயே இரும். நான் சென்று இக் கடிதத்தை வக்கீலிடம் காண்பித்துவிட்டு வருகிறேன்." என்றார். இதைக் கேட்டதும், சபாபதி பிள்ளை, வியப்புற்று,

"ஆனால் அவர் இன்னும் இதைப் பார்க்கவில்லையோ?" என்று வினவ, வாஞ்சி அய்யர்,

"இல்லை. அவருக்கு வரும் கடிதங்களை நான்தான் முதலில் உடைத்துப் பார்ப்பது வழக்கம். சரி; நீர் இரும். நான் இதோ வந்துவிட்டேன்." என்று கூறியவண்ணம் வக்கீலுடைய வீட்டிற்கு ஓடினார். அச்சமயம் வக்கீல் ஜகதீசய்யர், தன் வீட்டுத் திண்ணையில் நின்றுகொண்டு, கக்ஷிக்காரர்களில் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தார். அவர், தன் குமாஸ்தாவைக் கண்டதும் ஆவலுடன்,

"வாஞ்சி அய்யரே! இன்று தியாகராஜனிடமிருந்து கடிதம் வரவேண்டுமே. இன்னும் தபாற்காரன் வரவில்லையோ?" என்று வினவ, வாஞ்சி அய்யர், தன் சட்டைப் பையிலிருந்து அக் கடிதத்தை எடுத்தவண்ணம்,

"வந்துவிட்டான். இதோ கடிதம்." என்று கூறவே, வக்கீல்,

"சரி; உள்ளே வாரும்." என்று சொல்லிக்கொண்டே தன் அறைக்குச் சென்றார். அச்சமயம் அவ்வறையில் சுமார் 50 வயதுள்ள மற்றொருவரும் உட்கார்ந்துகொண்டிருந்தார். பாலசுப்பிரமணியய்யர் எனப் பெயர்கொண்ட

அவரும் மாயவரத்தில் கியாதிபெற்ற வக்கீல்களில் ஒருவர். அவரும் நம் ஜகதீசய்யரும் சகோதரர்கள்போல் தாராளமாய்ப் பழகுவது வழக்கம். இன்னும், அவ்விருவருமே வக்கீல் அனந்தராமய்யருடைய முக்கிய நண்பர்கள்.

நிற்க, குமாஸ்தா வாஞ்சி அய்யர் அவ்வறைக்குள் நுழைந்து, தியாகராஜனுடைய கடிதத்தை தன் எஜமானரிடம் கொடுத்ததும், ஜகதீசய்யர், அதை வாசித்துவிட்டு,

“ சரி ; அவன் இப்பொழுது வரமாட்டானென்பது எனக்கு ஏற்கனவே தெரியும். அவன் வந்து செய்யக்கூடியதும் ஒன்றும் இல்லை.” என்று கூறியவண்ணம், வாஞ்சி அய்யரை நோக்கி,

“ ஏன்காணும்! முருக விலாஸில் குடிவைக்கச் சொல்லுகிறானே. அதற்கென்ன செய்யலாம்?” என்று வினவ, வாஞ்சி அய்யர்,

“ அதில் என்ன கஷ்டம்? அதை வாடகைக்கு எடுத்துக்கொள்ள பலர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நேற்று கூட என் நண்பர் ஒருவர் அது தனக்கு வாடகைக்குக் கிடைக்குமா என்று என்னைக் கேட்டார். தியாகராஜன் இப்படி எழுதுவானென்பதை நான் அறியாமல் கிடைக்காதென்று சொல்லிவிட்டேன். வேண்டுமானால்—” என்று மேலே பேசுமுன், வக்கீல் பாலசுப்பிரமணியய்யர், தன் நண்பரை நோக்கி,

“ ஜகதீசா! என்ன சமாசாரம்?” என்று வினவினார். ஜகதீசய்யர்,

“ ஒன்றுமில்லை. அனந்தராமனுக்கு குற்றாலத்தில் பங்களா ஒன்று உண்டென்றும், அது இதுவரையில் காலியாயிருந்ததென்றும் உனக்கே தெரியும். அதில் குடிவைத்து வாடகை வாங்குவது கௌரவக் குறைச்சலென்று நினைத்து, அவன் (அனந்தராமய்யர்) அதில் குடிவைக்கச் சம்மதிக்கவில்லை. இப்பொழுது பம்பாயிலிருக்கும் அவனுடைய பிள்ளை தியாகராஜன் அதில் சீக்கிரம் குடிவைக்க



ஏற்பாடு செய்யச் சொல்லுகிறான்.” என்று கூறவே, பாலசுப்பிரமணியய்யர்,

“ ஜகதீசா! அதை நீ ஒருவருக்கும் கொடுக்கவேண்டாம். அதை எடுத்துக்கொள்ள என்னிடம் ஒருவன் தயாராயிருக்கிறான்.” என்றார். இதைக் கேட்டதும் ஜகதீசய்யர், ஆச்சர்யப்பட்டவர்போல்,

“ யாரது?” என்று வினவினார். பாலசுப்பிரமணிய அய்யர்,

“ என் மருமான் ஒருவன் கல்கத்தாவில் உத்தி——அடாடா! அவனைத்தான் உனக்குத் தெரியுமே. போனவருஷம் அவன் இங்கு வந்திருந்தபொழுது நீ அவனைப் பார்த்தாயே. அவன் நேற்று வந்திருக்கிறான். அவனுக்கு உடம்பு சரியாயில்லையாம். திடீரென்று ஒருவித மயக்கம் வருகிறதாம். அவ்வூர் டாக்டர் ஒருவர் அவன் இப்பக்கம் வந்து நல்ல காற்றுள்ள ஒரு கிராமத்தில் கொஞ்சகாலமிருந்தால் அந்த வியாதி ஸ்வஸ்தமாய்விடுமென்று சொன்னாராம். ஆகையால் 6 மாத லீவில் வந்திருக்கிறான். உனக்கு இஷ்டமிருந்தால், இந்த பங்களாவை—” என்று மேலே பேசுமுன், ஜகதீசய்யர்,

“ இஷ்டமில்லாமல் என்ன? ஆமாம்; அவனுக்கு இப்போப்பட்ட வியாதி எப்படி வந்தது. போனவருஷம் நான் அவனைப் பார்த்தபொழுது நன்றாயிருந்தானே.” என்று கூறவே, பாலசுப்பிரமணியய்யர்,

“ இப்பொழுதும் பார்ப்பதற்கு நன்றாய்த்தான் இருக்கிறான். இரு; இதோ அவனை அழைத்துக்கொண்டுவரச் சொல்லுகிறேன். அவனும் உன்னைப் பார்க்கவேண்டுமென்று சொன்னான்.” என்று கூறியவண்ணம், திரும்பி நம் வாஞ்சி அய்யரை நோக்கி,

“ ஸ்வாமி! அவன் என் வீட்டிலிருக்கிறான். தயவு செய்து நான் கூப்பிடுவதாகச் சொல்லி, அவனை அழைத்துக்கொண்டு வாரும்.” என்று கேட்டுக்கொண்டார். உடனே வாஞ்சி அய்யர், மரியாதையுடன்,

"இதோ அழைத்துக்கொண்டுவருகிறேன்." என்று கூறியவண்ணம் வெளியே சென்றார். ஆனால் வீதிக்கு வந்ததும் "என்ன அநியாயம்? இந்தப் பழிகாரன் இப்படி குறுக்கே வந்துவிட்டானே. முருகவிலாஸ் இவன் சிபார்சுசெய்யும் பேர்வழிக்குத்தான் கிடைக்கும். அடாடா! அது எங்களுக்குக் கிடைத்திருந்தால் எவ்வளவு சாதகமாயிருக்கும். சரி; அந்த பங்களாவிற்குள் நுழைய வேறு வழி கண்டுபிடிக்கவேண்டும்." என்று சிந்தித்துக்கொண்டே, அதே தெருவிலிருந்த வக்கீல் பாலசுப்பிரமணியய்யருடைய வீட்டிற்குள் நுழைந்தார். அவ் வீட்டின் முன் ஹாலில் மேலும் கீழும் உலாவிக்கொண்டிருந்த சுமார் 24 வயதுள்ள ஒரு அழகிய வாலிபன், அவரைக் கண்டதும், புன்முறுவல் செய்தவண்ணம், மரியாதையுடன் என்ன வேண்டுமென்று விசாரித்தான். ஆனால் வாஞ்சி அய்யர் உடனே விடையளிக்காமல் அவனை ஒருதரம் ஏற இறங்கக் கவனித்தார். அவ் வாலிபனுடைய முகத்தில், பார்ப்போர் மயங்கத்தக்க, ஒரு வசீகரமும் வியக்கத்தக்க சுறுசுறுப்பும் நன்கு புலப்பட்டன. வாஞ்சி அய்யர், நாம் சொன்னது போல் அவனை ஒருதரம் கவனித்துவிட்டு, தன்னுள், "இவனுக்கு என்னகேடு? அழித்தால் ஒரு டஜன் ஆஸாமி பண்ணலாம் போலிருக்கிறதே." என்று நினைத்துக்கொண்டு, வாயைவிட்டு,

"நீங்கள்தான் பாலசுப்பிரமணியய்யர்வாளுடைய மருமானோ?" என்று விசாரிக்க, அக் கட்டழகன் 'ஆம்' என்று விடையளித்ததும், தான் வந்த காரியத்தைச் சொன்னார். உடனே அவ் வாலிபன்,

"இதோ வந்துவிட்டேன்." என்று கூறியவண்ணம், பக்கத்தில் ஒரு நாற்காலியின்மீது கிடந்த ஒரு கதர் அங்கவஸ்திரத்தை எடுத்து மேலே போட்டுக்கொண்டு, "வாருங்கள்; போவோம்." என்றான்.

சற்று நேரத்திற்கெல்லாம், அவ்விருவரும் வக்கீல் ஜகதீசய்யருடைய அறைக்குள் நுழைந்ததும், ஜகதீசய்யர், சிரித்துக்கொண்டே அன்புடன்,



சென்னை-600 008
18878

"வா அப்பா! வா. மறந்துபோய்விட்டதே. உன் பெயரென்ன?" என்று வினவ, அவ் வாலிபன், மரியாதையுடன்,

"கிருஷ்ணமூர்த்தி." என்று விடையளித்தான். ஜகதீசய்யர், அவனை உட்காருமாறு உபசரித்துவிட்டு, அவன் அமர்ந்துகொண்டதும் தன் குமாஸ்தாவை நோக்கி,

"சரி; நீர் போம். உம்முடைய காரியத்தைப் பாரும்." என்று கூறவே, வாஞ்சி அய்யர் வெளியே சென்றார். அவர் திண்ணைக்கு வந்ததும், அங்கு இன்னும் உட்கார்ந்துகொண்டிருந்த கக்ஷிக்காரர்களை பிறகு வருமாறு சொல்லி அனுப்பிவிட்டு, தன் வீட்டிற்குச் சென்றார். அதன் முன்கட்டில் சபாபதி பிள்ளை அவரை அடக்க இயலாத ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணம் நின்றுகொண்டிருந்தான். வாஞ்சி அய்யர் அவனை மறுபடியும் மாடிக்கு அழைத்துச் சென்று விசனத்துடன் வக்கீல் வீட்டில் நடந்த எல்லாவற்றையும் விபரமாய்க் கூறவே, சபாபதி பிள்ளை,

"அடாடா! இப்பொழுது நாம் என்ன செய்யமுடியும்? நீர் சொல்லும் இந்த கிருஷ்ணமூர்த்தி, அதை வாடகைக்கு எடுத்துக்கொண்டு, உடனே அங்கு போய்விட்டால், நாம் எப்படி அதற்குள் நுழைந்து அக் கைகளைத் தேடி எடுக்கமுடியும்?" என்று வினவினான். ஆனால் வாஞ்சி அய்யர், உடனே அக் கேள்விக்கு விடையளிக்காமல், சிந்தனையுடன் மேலும் கீழும் உலாவ ஆரம்பித்தார். கடைசியில் திரும்பி தாழ்ந்த குரலில்,

"சபாபதி பிள்ளைவாள்! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அந்த பங்களாவின் மாடியில் சில பழய படங்கள் இருக்கின்றன. நீர் உம்முடைய நண்பன் சாரங்கபாணி சித்திர வேலையில் மிகவும் சாமர்த்தியமுள்ளவன் என்று சொல்லுகிறீர். ஆமாம்; நீர் ஒருநாள் உம்மால் பிறருடைய கையெழுத்தைப்போல் எழுதமுடியுமென்று சொன்னீரே. அதென்ன?—" என்று மேலே பேசுமுன், சபாபதி பிள்ளை,

"அதைப்ப[illegible] கவலை வேண்டாம்; எப்பேர்ப்பட்ட கையெழுத்தாயிருந்தாலும் அதைப்போல் என்னால் எழுதமுடியும். வேண்டுமானால் நீர் உடனே என்னைப் பரீக்ஷித்துப்பாருமே." என்றான். உடனே வாஞ்சி அய்யர், பக்கத்தில் ஒரு மேஜையின்மேல் கிடந்த ஒரு கடிதத்தைக் காண்பித்து,

"எங்கே? இதைப்போல் எழுதும் பார்ப்போம்." என்றார்.

அரைமணி நேரத்திற்குள், சபாபதி பிள்ளையால், பார்ப்போர் சிறிதும் சந்தேகிக்க வழியின்றி, பிறருடைய கையெழுத்தைப்போல் எழுதமுடியுமென்பது வெளியாயிற்று.

---

## அத்தியாயம் 4.

குற்றாலத்திலிருந்த முருக விலாஸ் எனப் பெயர்கொண்ட வக்கீல் அனந்தராமய்யருடைய பங்களா கிருஷ்ணமூர்த்திக்கு வாடகைக்கு விடப்பட்டது. முருக விலாஸ் சிறியதாயிருந்தபோதிலும் பார்ப்பதற்கு மிகவும் அழகாயும் வசிப்பதற்கு சௌகர்யமுள்ளதாகவும் இருந்தது. கட்டடம் சிறியதாயிருந்தபோதிலும், அதைச் சுற்றிலும் சில பெரிய தோட்டங்களும் பிரயோஜனமுள்ள பல விருக்ஷங்களும் இருந்தன. அது பல வருஷ காலமாக குடியின்றி காலியாயிருந்தபோதிலும் அதில் விலையுயர்ந்த மேஜை, நாற்காலி, பாத்திரங்கள், நேர்த்தியான விடங்கள் முதலிய சமான்கள் ஏராளமாயிருந்ததால், அவைகளைப் பார்த்துக்கொள்ளும்பொருட்டும், இன்னும் அதைச் சுற்றிலுமிருந்த தோட்டங்களைக் கவனித்துக்கொள்ளும்பொருட்டும், முருகன் எனப் பெயர்கொண்ட ஒரு கிழவன் நியமிக்கப்பட்டிருந்தான். அனந்தராமய்யர் இந்த பங்களாவை வாங்கியதுமுதற்கொண்டே இக்கிழவன் அதன் தோட்டக்காரனாயிருந்தானாகையால், அனந்தராமய்யருடைய குடும்பத்தில் அவன் மிகவும் பற்றுள்ளவன். முருகனுக்கு தற்



சமயம் கிட்டத்தட்ட 60 வயதிருக்கும். அவனுக்கு மாதம் ரூ. 10தான் சம்பளமாயிருந்தபோதிலும், அத் தோட்டங்களிலிருந்து அவனுக்கு மேலும் குறைந்தது 10 ரூ. கிடைக்கும். ஆகவே, அவனுடைய உழைப்பின் பலனாய் அத் தோட்டங்கள் மிகவும் மெச்சத்தக்க நிலைமையில் இருந்தன. அக் கிழவன் வசிக்கும்பொருட்டு அப் பங்களாவின் பக்கத்தில் சிறிய வீடு ஒன்று கட்டப்பட்டிருந்தது. முருகனுக்குள்ள இரு புதல்வர்களும் பக்கத்திலிருந்த தனிகர்களிடம் வேலைசெய்துகொண்டிருந்தனர். அக் கிழவனுடைய மனைவி இறந்து வெகுகாலமாய்விட்டது.

அவ்விதம் பங்களா வாடகைக்கு விடப்பட்ட விஷயம் முருகனுக்கு மறுதினமே தெரிவிக்கப்பட்டதும், அக் கிழவன் அதை சுத்தம் செய்து தயாராய் வைத்திருந்தான்.

நிற்க, நாம் சொல்லும் சமயம் குற்றாலத்தில் குஞ்சிதபாதம்ய்யர் எனப் பெயர்கொண்ட டாக்டர் ஒருவர் இருந்தார். அவ்வூர் ஜனங்கள் தங்களுக்கு அவரிடமிருந்த மரியாதையாலும் மதிப்பாலும் ஏற்கனவே அவருக்கு அய்யர் பட்டம் அளித்து அழைத்தபோதிலும், அவருக்கு வயது 24 தான் இருக்குமாகையால், நாம் அவரை டாக்டர் குஞ்சிதபாதமென்றே அழைப்போம். குஞ்சிதபாதம் உதார குணமும் பெருந்தன்மையும் வாய்ந்த ஒரு கட்டழகன். அவருக்கு இன்னும் விவாஹம் ஆகவில்லை. அவருக்கு செல்லம்மாள் எனப் பெயர்கொண்ட தங்கை ஒருவள் உண்டு. பெண்களுக்கு அவசியமான சகல நற்குணங்களும், பார்ப்போர் மயங்கத்தக்க அழகும் வாய்ந்த அப் பெண்மணியைத் தவிர, வேறு சகோதரிகளாவது சகோதரர்களாவது குஞ்சிதபாதத்துக்கு கிடையாதாகையால், அவர் தன் தங்கைமீது அளவற்ற பிரியம் வைத்திருந்தார். குஞ்சிதபாதத்தின் பெற்றோர்கள் இறந்து பல வருஷங்களாய்விட்டன. செல்லம்மாளுக்கு தற்சமயம் வயது கிட்டத்தட்ட 15 இருக்கும். ஆனால் அவளுக்கு இன்னும் விவாஹம் ஆகவில்லை. அதற்குக் காரணம், குஞ்சிதபாதம், பெண்களுக்கு 16 வயது ஆகுமுன் விவாஹம் செய்து

வைப்பது மிகவும் பிசகென்ற அபிப்பிராயமுள்ளவர். அதுவுமன்றி தன் தங்கையின்மீது அவருக்கிருந்த பிரியத்தின் மிகுதியால், அவளைவிட்டுப் பிரிய மனமில்லாமலும், அவளுக்கு வாய்க்கும் புருஷன் அவளை எவ்விதம் நடத்துவானோவென்ற கவலையாலும், அவளுடைய விவாஹத்தை தன்னால் முடிந்தவரையில் ஒத்திப்போடத் தீர்மானித்திருந்தார். அவருடைய வீட்டில் காவேரியம்மாள் எனப் பெயர் கொண்ட சமையற்காரி ஒருவள் உண்டு. ஆகவே நம் செல்லம்மாள் வீட்டுக் கார்யம் அதிகம் செய்ய அவசியமில்லாமலிருந்தது. ஆனால் அம் மங்கை அக் காரணத்தால் தன் பொழுதை வீணுக்காமல் மாதர்களுக்கு அவசியமான புத்திமதிகளைப் போதிக்கும் புஸ்தகங்களை வாசிப்பதிலும், இன்னும் ஸமயம் ஏற்படுங்கால் குஞ்சிதபாதம் தன் ஆஸ்பத்திரியில் செய்யும் வேலைக்கு தன்னால் இயன்றவரையில் உதவி செய்வதிலும் தன் காலத்தைக் கழித்துவந்தாள். குஞ்சிதபாதத்தின் ஆஸ்பத்திரியில், பெண்கள் சரீரத்தில் காயங்களுடன் வரும்பக்ஷத்தில், நம் செல்லம்மாளை அவர்களுக்கு சிகித்சை செய்வது வழக்கம். இன்னும், ஏழைகள் தங்களுடைய வியாதியின் பலனாய் ஆஸ்பத்திரிக்கு வரமுடியாமல் கஷ்டப்பட நேரிட்டால், அப் பெண் திலகம், கையில் மருந்துடன் அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று, அவர்களுக்கு வேண்டியதைச் செய்துவிட்டு வருவதுமுண்டு. எனவே, இக் காரணத்தாலும், இன்னும் அவளுடைய நற்குணங்களின் பலனாகவும் அவ்வூரிலுள்ள அனைவரும் அவள்மீது வியக்கத்தக்க அன்பும் அவளுடைய க்ஷேமத்தில் நாட்டமும் வைத்திருந்தனர். எல்லோரைக் காட்டிலும் அவளிடம் அதிகப் பிரியமும் மரியாதையும் வைத்திருந்தது முருகவிலாஸின் தோட்டக்காரனாகிய நம் முருகனே. அதற்குக் காரணம், அக் கிழவன், சென்ற வருஷத்தில் ஒரு சமயம் சீக்கில் அடிபட்டு, மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தபொழுது, அம் மங்கை அவன் விஷயத்தில் எடுத்துக்கொண்ட சிரத்தையும் சிரமமுமே. அக் கிழவனுக்கு, அவள், மருந்துடன், தன் வீட்டிலிருந்து ஆகா



ரமும் தயார்செய்து கொண்டுபோய், அவன் அதைப் புசிக்கும் வரையில், அவன் பக்கத்திலேயே இருந்து, அவன் தன் நோயின் கடுமையை உணராவண்ணம் அன்புடன் கொஞ்சநேரம் பேசிவிட்டு வருவது வழக்கம். ஆகவே, அக் கிழவன் தனக்கு அவளிடமுள்ள பிரியத்தையும் மரியாதையையும் பலவிதங்களில் வெளியிடுவதுண்டு. தன் தோட்டத்திலுள்ள புஷ்பங்களில் நம் செல்லம்மாள் எடுத்துக்கொண்டதுபோக பாக்கியைத்தான் அவன் மற்றவர்களுக்கு விற்பது வழக்கம். இன்னும் எந்தெந்த சமயம் அத் தோட்டங்களில் என்னென்ன நல்ல கனிகளும் நேர்த்தியான காய்கரிகளும் கிடைக்குமோ அவைகளை பலவந்தம் செய்தாவது அவளுடைய வீட்டில் கொடுத்துவிடுவான். சிலசமயம் அப் பெண்மணியே அத் தோட்டத்திற்குச் சென்று தனக்கு வேண்டிய புஷ்பங்களைப் பறித்து எடுத்துக்கொள்வதுமுண்டு.

இனி நம் கதையைக் கவனிப்போம்.

கிருஷ்ணமூர்த்தி மாயவரத்தில் வங்கில் ஜகதீசய்யருடைய வீட்டிற்கு வந்த மறுநாள் மாலை சுமார் 6 மணி இருக்கும். அப்பொழுது முருகவிலாஸின் தோட்டத்தில், கோடைகாலத்தில் மாலை வேளையில் உட்கார்ந்துகொண்டு காற்றுவாங்கும்பொருட்டு, ஸிமெண்டினால் மிகவும் அழகாய்க் கட்டப்பட்டிருந்த பல ஆஸனங்களில் ஒன்றில், செல்லம்மாள், உட்கார்ந்துகொண்டு எதிரில் வணக்கத்துடன் நின்றுகொண்டிருந்த முருகனுடன் சம்பாஷித்தவண்ணம், மல்லிகை மலர்களால் ஒரு மாலை தொடுத்துக்கொண்டிருந்தாள். அச்சமயம் அவளைப் பார்த்த ஒவ்வொரு வாலிபனும், "ஹே தெய்வமே! எனக்கு இப்பேர்ப்பட்ட பெண் மனைவியாகக் கிடைக்கமாட்டாளோ?" என்று ஏங்கித் துடிப்பானென்பது திண்ணம். அவள், நடுவில் புன்முறுவல் செய்து, அக் கிழவனை நோக்கி,

"முருகா! இந்த வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டார்களாமே?" என்றாள்.

முருகன் :—ஆமாம். இதை எடுத்துக்கொண்டவர் இதோ வந்துவிடுவார்.

செல்லம்:—சரி; இனிமேல் நான் என் இஷ்டப்படி இங்கு வந்து சுத்தமுடியாது. இப்பேர்ப்பட்ட புஷ்பமும் எனக்குக் கிடைக்காது.

முருகன் :—அம்மணி! புஷ்பத்தைப் பற்றி நீங்கள் கவலைப் படவேண்டாம். வருபவர்களுக்கு இந்த பங்களாவின் கீழ்பாகம்மட்டும்தான் வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு மாடியிலாவது தோட்டங்களிலாவது சிறிதும் பாத்தியமில்லை. ஆகையால் நான் இதற்கு தோட்டக்காரனாயிருக்கும்வரையில் உங்களுக்கு புஷ்பத்திற்கு குறைவில்லாமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்.

செல்லம் :—பேஷ்! ரொம்ப சந்தோஷம். ஆமாம்; இதை எடுத்துக்கொண்டிருப்பவர்கள் என்ன பிராமணர்களா? அல்லது—

முருகன் :—பிராமணர்களென்றுதான் தோன்றுகிறது.

செல்லம் :—பெரிய குடும்பமோ?

முருகன் :—அது எனக்குத் தெரியாது. ஐயா எழுதிய கடிதத்தில் அதைப்பற்றி ஒன்றும் எழுதவில்லை.

அச்சமயம் வண்டி ஒன்று வந்து அவ் வீட்டிற்கெதிரில் நிற்கவே, செல்லம்மாள், தன் புஷ்பங்களையும் பாதியிலிருந்த மாலையையும் அப்படியே தன் மடியில் வைத்துக் கொண்டு, "அதோ அவர்கள் வந்துவிட்டார்கள்." என்று கூறியவண்ணம், வண்டியிலிருந்தவர்கள் இறங்கி உள்ளே சென்றதும் தான் வெளியே போய்விடலாமென்று நினைத்து, ஒரு மறைவில் நின்றுகொண்டாள். மறுநிமிஷம் வண்டியிலிருந்து இறங்கிய கிருஷ்ணமூர்த்தி அத் தோட்டத்திற்குள் நுழையவே, முருகன், அவன் யாரென்பதை ஊகித்துக்கொண்டு, அவனை மரியாதையுடன் நமஸ்கரித்து விட்டு,



"ஸ்வாமி! வாருங்கள். நீங்கள்தான் இந்த பங்களாவை வாடகைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்." என்று கூறவே, கிருஷ்ணமூர்த்தி, புன்சிரிப்புடன்,

"ஆமாம். நீதான் முருகனோ?" என்று விசாரித்தான். அக் கிழவன் 'ஆம்' என்று விடையளித்ததும், கிருஷ்ணமூர்த்தி, பிரியத்துடன், "இந்தா. வக்கில் ஜகதீசய்யர் உனக்கு ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார்." என்று கூறியவண்ணம் தன் சட்டைப்பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து முருகனிடம் கொடுத்துவிட்டு, "சரி; முதலில் என் சாமான்களை எங்கு வைக்கவேண்டுமென்பதை வண்டிக்காரனுக்குக் காண்பி." என்றான்.

இதற்குள், வண்டிக்காரன் ஒரு பெரிய பெட்டி, ஒரு படுக்கை, ஒரு கூஜா இம் மூன்று சாமான்களுடன் தயாராய் நின்றுகொண்டிருந்தான். முருகன் அக் கடிதத்தை வாங்கி மடியில் வைத்துக்கொண்டு அவ் வண்டிக்காரனை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றான். அவர்கள் தலை மறைந்ததும், கிருஷ்ணமூர்த்தி, ஒருதரம் நாலாபக்கங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு, பெருமூச்செறிந்தவண்ணம் தானும் உள்ளே சென்றான். இதைக் கவனித்துக்கொண்டிருந்த செல்லம்மாள் உடனே துரிதமாய் வெளியே போய்விட்டாள். ஆனால் அம் மங்கை அத் தோட்டத்தின்வழியாய்ப் போய்க்கொண்டிருக்கையில், அச்சமயம் தற்செயலாய்த் திரும்பிய கிருஷ்ணமூர்த்தி அவளைப் பார்க்க நேரிட்டது. உடனே அவ் வாலிபன், வியப்புற்று, "யார் இது? பார்த்தால் பிராமணப்பெண்போலிருக்கிறதே." என்று தன்னுள் சிந்தித்துக்கொண்டே, அவ் வீட்டில் தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த பாகத்தை ஒருதரம் நன்றாய்ப் பார்த்துவிட்டு, கடைசியில், மாடிப்படிகளின் சமீபம் வந்ததும், மறுபடியும் ஒருதரம் பெருமூச்செறிந்தான். பிறகு, "சரி; நமக்கு அவசியம் மாடிதான். இருக்கட்டும்." என்று ஏதோ ஒருவிதத் தீர்மானத்திற்கு வந்தவன்போல், அவ் விடத்தைவிட்டுச் சென்றான். இதற்குள் முருகன், கிருஷ்ணமூர்த்தியின் சாமான்களை அவ் வாலிபனுக்குக் கொடுக்கப்

பட்டிருந்த மூன்று அறைகளில் ஒன்றில் வைக்கச்சொல்லி விட்டு, அவ் வண்டிக்காரனுடன் பேசிக்கொண்டிருந்தான். சற்றுநேரத்திற்கெல்லாம் கிருஷ்ணமூர்த்தி அவ்வறைக்குள் நுழையவே, அக் கிழவன் அவனை ஒருதரம் ஏற இறங்கக் கவனித்துவிட்டு, பிறகு,

"ஆனால் நீங்கள் மட்டும்தான் வந்திருக்கிறீர்களோ?" என்று வினவ, கிருஷ்ணமூர்த்தி,

"ஆமாம். இரண்டு தினங்களில் ஒரு சமையற்கார அம்மாளும் என் தோழன் ஒருவனும் வருவார்கள். ஆனால் என் தோழன் இரண்டு நாட்கள் இருந்துவிட்டுப் போய்விடுவான்." என்று விடையளித்தான். உடனே முருகன்,

"அதுவரையில் உங்களுடைய சாப்பாட்டிற்கு—" என்று மேலே பேசுமுன், அவ் வாலிபன்,

"அதுவரையில் ஹோட்டலில்தான் சாப்பிடவேண்டும். இவ்வூரில் நல்ல ஹோட்டல் இருக்கிறதோ இல்லையோ?" என்று வினவ, முருகன்,

"இல்லாமலிருக்குமா? பாலக்காட்டு ஐயர் ஒருவருடைய ஹோட்டல் சமீபத்தில் இருக்கிறது. அதில் சாப்பாடு மிகவும் தரமாயிருக்கும். அவரை எனக்கு நன்றாய்த் தெரியும். அவரிடம் சொல்லிவிட்டால் வேண்டுமானால் சாப்பாடு வீட்டிற்கே வந்துவிடும்." என்று விடையளிக்கவே, கிருஷ்ணமூர்த்தி,

"பேஷ்! ரொம்ப சந்தோஷம். ஆமாம்; முருகா! நீ எனக்கு ஒரு காரியம் செய்யவேண்டுமே." என்றான். அக் கிழவன்,

"என் என்னவேண்டும்? என்று வினவ, அவ் வாலிபன்,

"ஒன்றுமில்லை. அதைப்பற்றி பிறகு பார்த்துக் கொள்ளலாம். ஆமாம்; என் வேலைகளைச் செய்ய எனக்கு ஒரு ஆள் வேண்டும். நீயே செய்வதாயிருந்தால் எனக்கு ஆக்ஷேபணை இல்லை. உனக்கு மாதம் 10 ரூபாய் கொடுக்கிறேன்." என்றான். இதைக் கேட்டதும் முருகன், ஆவலுடன்,



"நானே செய்கிறேன்." என்று ஒப்புக்கொண்டான். உடனே அவ் வாலிபன், இன்னும் காத்துக்கொண்டிருந்த அவ் வண்டிக்காரனை அனுப்பிவிட்டு, முருகனை நோக்கி,

"சரி; நான் கொஞ்சநேரம் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருக்கிறேன். நீ சென்று அந்தப் பாலக்காட்டு ஐயரிடம் சாப்பாட்டுக்குச் சொல்லிவிட்டுவா." என்று கூறி விட்டு, பிறகு, திடீரென்று ஏதோ நினைத்துக்கொண்டவன் போல், "ஆமாம்; நான் வரும்பொழுது தோட்டத்தில் ஒரு பெண் நின்றுகொண்டிருந்தாளே. அவள் யார்?" என்று வினவினான்.

---

## அத்தியாயம் 5.

மறுநாட்காலை சுமார் 7 மணி இருக்கும்.

அச்சமயம் கிருஷ்ணமூர்த்தி, தன் படுக்கை அறையில் சிந்தாசாகரத்தில் மூழ்கியவனாய், மேலும் கீழும் உலாவிக்கொண்டிருந்தான். சற்றுநேரத்திற்கெல்லாம் முருகன் அவ்வறைக்குள் நுழைந்து, அவனைப் பார்க்கும்பொருட்டு, ஒருவன் வந்திருப்பதாகக் கூறவே, அவ் வாலிபன்,

"யாரது? உள்ளே அழைத்துக்கொண்டுவா." என்று உத்தரவிட, முருகன் மறுபடியும் வெளியே சென்றான்; சற்றுநேரத்திற்கெல்லாம் சுமார் 35 வயதுள்ள ஒருவன், அவ்வறைக்குள் நுழைந்து, மரியாதையுடன் நமஸ்கரிக்கவே, கிருஷ்ணமூர்த்தி, அவனை உற்றுநோக்கியவண்ணம், உட்காருமாறு உபசரித்து, வந்தவன் உட்கார்ந்துகொண்டதும்,

"ஐயா! உங்களுக்கு நான் என்ன செய்யக்கூடும்?" என்று விசாரித்தான். வந்தவன்,

"என் பெயர் சாரங்கபாணி. நான் இதுவரையில் பம்பாயில் வேலையாயிருந்தேன். எனக்கு தொழில் சித்திர வேலை. என் சொந்த ஊர் மதுரை. நான் பம்பாயிலிருந்த பொழுது, எனக்கு இவ் வீட்டின் சொந்தக்காரராகிய தியாகராஜய்யரை நன்றாய்த் தெரியும். போனமாதம் என்னை

வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். பிறகு நான் எவ்வளவோ சிரமப்பட்டும் வேறு வேலை கிடைக்கவில்லை. கடைசியில் ஊருக்கு வந்துவிடுவதென்று தீர்மானித்து என் எண்ணத்தை இந்த தியாகராஜய்யரிடம் நான் வெளியிட்டபொழுது, அவர் இந்த பங்களாவின் மாடியில் இருக்கும் சில பழய படங்களுக்கு மறுபடியும் வர்ணம் வைக்கவேண்டுமென்று சொன்னார். அந்த வேலையை எனக்குக் கொடுக்குமாறு நான் கேட்டுக்கொள்ளவே, அவர் மாயவரத்தில் இருக்கும் ஜகதீசய்யர் என்ற வக்கீல் ஒருவருக்கு ஒரு கடிதம் கொடுத்தார். நேற்று இரவு நான் இந்த ஜகதீசய்யரைப் பார்த்தேன். அவர் இந்த பங்களாவின் மாடிச் சாவியை என்னிடம் கொடுத்து, முதலில் என்னை அப் படங்களைப் பார்த்து, அவைகளுக்கு மறுபடியும் வர்ணம் வைக்கமுடியுமாவென்றும், அதற்கு என்ன செலவாகுமென்றும் சொல்லச் சொன்னார். இன்னும், இப்பொழுது நீங்கள் இவ் வீட்டில் இருப்பதால் நான் தினம் மாடிக்கு வந்து வேலைசெய்வதில் உங்களுக்கு ஏதாவது அசௌகர்யமிருக்குமாவென்றும் கேட்கச் சொன்னார். இதோ அவர் ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார்.'' என்று கூறியவண்ணம், ஒரு கடிதத்தை கிருஷ்ணமூர்த்தியிடம் கொடுத்தான். அவ் வாலிபன், அக் கடிதத்தை வாசித்துவிட்டு,

"நீர் எத்தனை நாள் மாடியில் வேலை செய்வீர்?'' என்று வினவ, சாரங்கபாணி,

"நான் அப் படங்களைப் பார்த்தபிறகுதான் சொல்ல முடியும்.'' என்று விடையளிக்கவே, கிருஷ்ணமூர்த்தி,

"அதான் மாடிச்சாவி உம்மிடம் இருப்பதாகச் சொன்னீரே; போய்ப் பாருமே. நீர் வேலைசெய்வதில் எனக்கு ஆக்ஷேபனை இல்லை. இரும்; நல்ல படங்களென்றால் எனக்கும் கொஞ்சம் பைத்தியமுண்டு; நானும் வருகிறேன்.'' என்றான்.

பிறகு இருவரும் மாடிக்குச் சென்றார்கள். சாரங்கபாணி தன் சட்டைப்பையிலிருந்து ஒரு சாவியை எடுத்து



ஒரு பெரிய ஹாலின் கதவைத் திறந்தான். உடனே இருவரும் உள்ளே நுழைந்தனர்.

நிற்க, அவ்விருவரும் பேசிக்கொண்டிருந்ததை கவனித்துக்கொண்டிருந்த முருகன், சாரங்கபாணி அந்த ஹாலின் கதவைத் திறந்ததும், திடுக்கிட்டான். உடனே, ஏதோ சந்தேகித்தவன்போல், பூனைபோல் சிறிதும் சப்தமின்றி தானும் மேலே சென்றான்.

* * * *

அதேதினம் இரவு சுமார் 8 மணி இருக்கும்.

அச்சமயம் டாக்டர் குஞ்சிதபாதத்தின் வீட்டில் அவருடைய தங்கை சமையற்காரி காவேரி அம்மாளுடன் பேசிக்கொண்டிருந்தாள். சற்றுநேரத்திற்கெல்லாம், யாரோ அவ் வீட்டிற்குள் அவசரத்துடன் ஓடிவரும் சப்தம் கேட்கவே, செல்லம்மாள் வியப்புற்று எழுந்து முன்கட்டிற்கு ஓடினாள். அவ்விதம் ஓடிவந்தது முருக விலாஸின் தோட்டக்காரனாகிய நம் முருகனேயொழிய வேறல்ல. அக் கிழவனுடைய முகம் பயத்தினாலும் கவலையாலும் விகாரமடைந்திருந்தது. அவன், செல்லம்மாளைக் கண்டதும், டாக்டர் எங்கென்று அவசரத்துடன் வினவ, அம் மங்கை,

"முருகா! யாருக்கு என்ன நேரிட்டது?'' என்று கேட்கவே, அக் கிழவன், தன் வியர்வையைத் துடைத்துக்கொண்டே, தடுமாற்றத்துடன்,

"அந்த ஐயா (கிருஷ்ணமூர்த்தி) மாடியிலிருந்து கீழே விழுந்துவிட்டார். டாக்டர் எங்கே?'' என்று மறுபடியும் வினவினான். செல்லம்மாள் 'என் தமயன் வீட்டிலில்லை' யென்று கூறவே, அக் கிழவன்,

"அம்மா! நீங்களாவது உடனே வந்து பாருங்கள். அவருடைய மண்டையில் பெரிய காயம் ஒன்று பட்டிருக்கிறது. அவர் உயிருடன் இருக்கிறாரா அல்லது ஏற்கனவே இறந்துவிட்டாரா என்பதும் எனக்குத் தெரியவில்லை. தயவு செய்து உடனே வாருங்கள்.'' என்று கல்லும் கரையத்

தக்கனிடம் கெஞ்சினான். அப் பெண்மணி, திகைப்புற்று, கொஞ்ச நேரம் அசைவின்றி சிலைபோல் நின்றுவிட்டு, பிறகு,

"ஆமாம்; அவர் எதற்காக மாடிக்குப் போனார்? எங்கிருந்து எப்படி விழுந்தார்?" என்று வினவ, அக் கிழவன்,

"அது எனக்குத் தெரியாது. 6 மணி சுமாருக்கு மொட்டை மாடியில் உலாவப்போவதாகச் சொல்லிவிட்டு மேலே போனார். அப்பொழுது நான் தோட்டத்திலிருந்தேன். சற்றுநேரத்திற்கெல்லாம் தடதடவென்று ஒரு சப்தம் கேட்கவே, நான் உள்ளே ஓடிப்போய்ப் பார்த்தேன். அம்மா! உங்களுக்குப் புண்ணியம் உண்டு. உடனே வந்து பாருங்கள்." என்று மறுபடியும் கெஞ்சவே, அம் மங்கை, விசனத்துடன்,

"முருகா! நீ சொல்வதைப் பார்த்தால் நான் வருவதில் பிரயோஜனமிருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை இன்னும் எனக்கு அவரை முன்பின் தெரியாது. அப்படியிருக்கும்பொழுது பெண்ணாகிய நான் எப்படி இவ்வேளையில் வரமுடியும்?" என்றாள். அக் கிழவன்,

"அம்மா! இந்த சமயத்தில் ஆணென்றும் பெண்ணென்றும் பார்க்கலாமா? அதுவும் நான் பக்கத்திலிருக்கும்பொழுது உங்களுக்கென்ன கவலை? தயவுசெய்து உடனே வாருங்கள்." என்று மன்றாடவே, செல்லம்மாள், பக்கத்திலிருந்த காவேரி அம்மாளை நோக்கி,

"பாட்டி! அண்ணா வந்தால் உடனே முருக விலாஸுக்கு வரச்சொல்லுங்கள். முதலில் நான் போகிறேன்," என்று கூறியவண்ணம் பரபரப்புடன் பக்கத்திலிருந்த ஒரு அறைக்குள் நுழைந்து ஒரு சிறிய கைப்பெட்டியுடன் மறுபடியும் வெளியே வந்து, அக் கிழவனை நோக்கி,

"வா; போவோம்." என்றாள். மறுநிமிஷம் இருவரும் போய்விட்டனர்.

அவர்கள் சென்ற 5 நிமிஷ நேரத்திற்குள் டாக்டர் குஞ்சிதபாதம் வந்துசேர்ந்தார். அவரைக் கண்டதும்



காவேரி அம்மாள் நடந்த விஷயத்தைக் கூறவே, குஞ்சிதபாதம், சிறிதும் தாமதம் செய்யாமல், முருக விலாஸுக்குச் சென்றார்

குஞ்சிதபாதமும் செல்லம்மாளும் மறுபடியும் தங்களுடைய வீட்டிற்குத் திரும்பிவந்தபொழுது மணி கிட்டத்தட்ட 9 இருக்கும். பிறகு குஞ்சிதபாதம், தன் மாலைக் கடன்களைச் செய்துமுடித்துவிட்டு சாப்பிட்டுக்கொண்டிருக்கையில், செல்லம்மாள்,

"அண்ணா! அந்தக் காயம் அவருக்கு எப்படி ஏற்பட்டதென்று உனக்குத் தோன்றுகிறது?" என்று வினவ, குஞ்சிதபாதம், புன்சிரிப்புடன்,

"ஏன்? உனக்கு அதில் என்ன சந்தேகம்? அதான் அவரேதான் மாடியிலிருந்து இறங்கும்பொழுது தவறி விழுந்துவிட்டதாகச் சொல்லுகிறாரே. இன்னும், முருகனும் தான் தடதடவென்ற சப்தத்தைக் கேட்டதாகச் சொல்லுகிறான். ஏன்; உனக்கு என்ன தோன்றுகிறது?" என்று கேட்கவே, அம் மங்கை,

"அண்ணா! அவ்விருவரும் சொல்வது சுத்தப் பொய். அவர் மாடிப்படியிலிருந்து விழவே இல்லை." என்றாள். இதைக் கேட்டதும், குஞ்சிதபாதம், வியப்புற்று,

"என்னடி! நீ குருவுக்கு மிஞ்சின சிஷ்யனாய் இருக்கிறாயே. சரி; அவர் மாடிப்படியிலிருந்து விழவில்லை என்பது உனக்கு எப்படித் தெரியும்?" என்று வினவ, செல்லம்மாள்,

"முருகன் தடதடவென்ற சப்தத்தைக் கேட்டது வாஸ்தவமானால், அவர் குறைந்தது 15வது படியிலிருந்தாவது விழுந்திருக்கவேண்டும். நான் முதலில் அவரைப் பார்த்தபொழுது, அவர் கீழே தரையில் கிடந்த விதத்தையும் இடத்தையும் நன்றாய்க் கவனித்தேன். மாடிப்படிகளில் உருண்டு விழுந்தவர் அவ்விதம் அவ்விடத்தில் கிடக்கவே முடியாது. இன்னும், அவர் உருண்டு விழுந்திருந்தால், அவருடைய வேஷ்டியும் சட்டையும் மிகவும் அலைக்

திருக்கும். அவருடைய பின் மண்டையில் அக் காயம் படவும் நியாயமில்லை. அதுவுமன்றி, அக் காயத்தைத் தவிர, அவருடைய சரீரத்தில் வேறு எவ்வித—'' என்று அவள் மேலே பேசுமுன், குஞ்சிதபாதம், தன் முகத்தில் ஆனந்தம் தாண்டவமாட,

"செல்லம்! உன் மூளை அபாரமாய் வேலைசெய்கிறதே. சரி; அப்படியானால் அக் காயம் எப்படி ஏற்பட்டதென்று நீ சொல்லுகிறாய்?" என்று வினவினார். அம் மங்கை, அமைதியுடன்,

"அண்ணா! எனக்குத் தோன்றுவதைச் சொல்கிறேன். வீணாய் என்னைக் கேலி செய்யாதே. அவர் கீழே மாடிப்படியின் சமீபம் நின்றுகொண்டிருந்தபொழுது, ஒருவன், பின் பக்கத்திலிருந்து, ஒரு தடியாலோ அல்லது கல்லாலோ அவருடைய மண்டையில் அடித்திருக்கவேண்டும்." என்று கூறவே, குஞ்சிதபாதம்,

"செல்லம்! சபாஷ்." என்று கூறியவண்ணம், ஒரு தரம் குதித்தார்.

## அத்தியாயம் 6.

மறுநாள் மாலை 5 மணி இருக்கும்.

அச்சமயம் டாக்டர் குஞ்சிதபாதம் தன் ஆஸ்பத்திரியில் வெளியில் செல்லத் தயாராய் நின்றுகொண்டிருந்தார். சற்றுநேரத்திற்கெல்லாம், அவர், தன் வாயைவிட்டு, "என்ன? முருகன் இன்னும் வந்து அவருக்கு (கிருஷ்ண மூர்த்திக்கு) மருந்து வாங்கிக்கொண்டு போகவில்லையே." என்று கூறிவிட்டு, பிறகு, "அம்மா செல்லம்!" என்று அன்பொழுகும் குரலில் அழைக்கவே, அம் மங்கை ஓடிவந்ததும்,

"நீ முருக விலாஸ் பக்கம் போகப்போகிறாயோ?" என்று வினவினார். அப் பெண்மணி,

"ஏன்? போகலாமென்றுதான் இருக்கிறேன். ஏன் வேண்டும்?" என்று மரியாதையுடன் கேட்க, குஞ்சிதபாதம்,



"ஒன்றுமில்லை. அவருக்கு மருந்து வாங்கிக்கொண்டு போகும்பொருட்டு முருகனை வரச்சொல்லியிருந்தேன். அவன் இன்னும் வரவில்லை. நீ அப் பக்கம் போனால் இதை அவனிடம் கொடுத்துவிடு." என்று கூறியவண்ணம், ஒரு குப்பியைக் காண்பித்துவிட்டு, "சரி; நான் வெளியில் போய்விட்டு வருகிறேன்." என்று கூறிக்கொண்டே போய்விட்டார்.

அவர் சென்ற கால்மணி நேரத்திற்கெல்லாம் செல்லம்மாளும் மருந்தை எடுத்துக்கொண்டு வெளியே சென்றாள். அம் மங்கை, "இதில் ஏதோ விசேஷம் இருக்கவேண்டும். இவர் ஒருவருக்கு இவ்வளவு பெரிய வீடு அவசியமே இல்லை. இன்னும் இவர் மாடியிலிருந்து தான் கீழே இறங்கும்பொழுது விழுந்ததாக ஏன் புளுகவேண்டும்?" என்று சிந்தித்துக்கொண்டே, கடைசியில் முருக விலாஸின் தோட்டத்திற்குள் நுழைந்தவள், அதில் சாரங்கபாணி சந்தேகிக்கத்தக்கவாறு நின்றுகொண்டிருப்பதைக் கண்டதும், வியப்புற்று, "இவன் யார்? இவன் முகத்தைப் பார்த்தால் மகா அயோக்கியன்போல் தோன்றுகிறதே." என்று தன்னுள் சொல்லிக்கொண்டு, ஒருதரம் அவனை உற்றுநோக்கினாள். அவள் சாரங்கபாணியைப் பார்க்கமுடிந்தபோதிலும் அவன் அவளைப் பார்க்கமுடியாமலிருந்தது. சாரங்கபாணியின் நடவடிக்கை வரவர மேலும் சந்தேகிக்கத்தக்க விதமிருந்ததால், அம் மங்கை, மேலே செல்லாமல், அப்படியே ஒரு மறைவில் நின்றுகொண்டு அவனை மேலும் கவனிக்கலானாள்.

அப் பங்களாவிற்குள் நுழைய அதன் முன்பக்கத்தில் இரு கதவுகள் இருந்தன. ஆனால் அச்சமயம் அவைகளில் ஒன்று வெளிப்பக்கம் பூட்டப்பட்டிருந்தது. சாரங்கபாணி, ஒருதரம் திருடனைப்போல் நாலாபக்கங்களையும் கவனித்துவிட்டு, மெல்ல அதை நோக்கிச் சென்றான். பிறகு தன் மடியிலிருந்து சாவிக் கொத்து ஒன்றை எடுத்து அப் பூட்டைத் திறக்க முயன்றான். ஆனால் அவன் பல சாவிகளை உபயோகித்தும் அதைத் திறக்கமுடியவில்லை.

கடைசியில் ஒன்று சரியாயிருக்கவே, அப் பூட்டை மறுபடியும் பூட்டிவிட்டு, அச் சாவியைக் கொத்திலிருந்து கழட்டி தன் சட்டைப்பையில் வைத்துக்கொண்டு, மறுபடியும் ஒருதரம் நாலாபக்கங்களையும் கவனித்தவண்ணம் துரிதமாய் திறந்திருந்த மற்றொருவழியாய் அவ் வீட்டிற்குள் சென்றான்.

சாரங்கபாணியின் தலை மறைந்ததும், செல்லம்மாள், "இதை என் தமயனிடம் சொல்லவேண்டும்." என்று தன்னுள் சொல்லிக்கொண்டே, அவ் வீட்டின் பின்பக்கத்திலிருந்த முருகனுடைய வீட்டிற்குச் சென்றவள் திடுக்கிட்டாள். ஏனெனில், அக் கிழவன், "ஐயோ! ஐயோ!" என்று முனகியவண்ணம், தரையில் படுத்துக்கொண்டிருந்தான். அதைக் கண்டதும், அம் மங்கை, ஓடி அவன் பக்கத்தில் நின்றுகொண்டு, "முருகா! முருகா!" என்று அழைக்கவே, அக் கிழவன், தன் கண்களைத் திறந்து, மிரண்ட பார்வையுடன், அவளை ஒருதரம் நோக்கினான். பிறகு, சம்பந்தமில்லாத சில வார்த்தைகளை முணுமுணுத்தவண்ணம் மறுபடியும் தன் கண்களை மூடிக்கொண்டான். அவனுக்குத் தான் யாரென்பதே புரியவில்லை என்பதை செல்லம்மாள் ஊகித்தறிந்துகொண்டு, கவலையுடன் அவன் பக்கத்தில் மண்டிபோட்டு உட்கார்ந்துகொண்டு, அவனுடைய சரீரத்தைத் தொட்டுப்பார்த்ததும், அவனுக்கு கடுமையான ஜுரம் இருந்ததைத் தெரிந்துகொண்டு, மறுபடியும் அவனுடைய பெயரைச் சொல்லி அழைத்தாள். ஆனால் அக் கிழவன் அவள் தன் பக்கத்திலிருப்பதைச் சிறிதும் உணர்ந்ததாகவே தோன்றவில்லை. பிறகு செல்லம்மாள் கொஞ்சநேரம் அவனை அனுதாபத்துடன் உற்றுநோக்கியவாறு உட்கார்ந்திருந்தாள். கடைசியில், "அடாடா; இவனுக்கு இப்படி வந்துவிட்டதே. இவனைக் கவனிக்கக்கூடியவர் ஒருவருமில்லையே." என்று விசனமுற்று, அந்த நிலைமையில் அவனை விட்டுச் செல்ல மனமில்லாமலிருந்தபோதிலும், "இருக்கட்டும்; என் தமயனை வந்து பார்க்கச் சொல்லுகிறேன்." என்று தீர்மானித்தவளாய் வெளியே சென்றாள்.



பிறகு, "ஆமாம்; இந்த மருந்தை நான் என்னசெய்கிறது? இவ் வீட்டிற்குள் நுழைய எனக்கு பயமாயிருக்கிறதே." என்று அவள் சிந்தித்துக்கொண்டிருக்கையில், சாரங்கபாணியும் சுமார் 23 வயதுள்ள மற்றொரு பிராமண வாலிபனும் அவ் வீட்டிலிருந்து வெளியே செல்வதைக் கண்டாள். உடனே, அம் மங்கை, "இவ் வீட்டில் எத்தனை பேர் இருக்கிறார்கள்?" என்று வியப்புற்று, அவ் வீட்டிற்கெதிரில் வந்து நின்றுகொண்டு, உள்ளே நுழையலாமா அல்லது கூடாதா என்று யோசித்துக்கொண்டிருக்கையில், அவ் வீட்டிற்குள் நாய் ஒன்று பயங்கரமாய்க் குலைக்கும் சப்தம் கேட்கவே, திடுக்கிட்டவளாய், வெளியே ஓடினாள். ஆனால் கொஞ்சதூரம் சென்றதும் அவள், திரும்பிப்பார்த்தபொழுது, அவ் வீட்டின் வாசற்படியில் சுமார் 55 வயதுள்ள ஒரு அமங்கலி அம்மாள் நின்றுகொண்டிருப்பதைக் காணவே, "நல்லவேளை. மருந்தை இவளிடம் கொடுத்துவிடலாம்." என்று தீர்மானித்து, மறுபடியும் திரும்பிவந்து, மருந்தை அக் கிழவியிடம் கொடுத்துவிட்டு,

"அம்மா! நான் இவ்வூர் டாக்டருடைய தங்கை. அவர் இதை (மருந்தை) இவ் வீட்டில் கொடுக்கச் சொன்னார்." என்று கூறவே, அக் கிழவி, அன்புடன்,

"அப்படியா? மருந்து வாங்கிக்கொண்டு வருவதற்காக இப்பொழுதுதான் முத்துஸ்வாமி உங்களுடைய வீட்டிற்குப் போனான். பேஷ்! நீ டாக்டருடைய தங்கையா? ஏன் அம்மா! உன் பெயரென்ன?" என்று விசாரித்தாள். செல்லம்மாள், தன் பெயரைக் கூறிவிட்டு, மரியாதையுடன்,

"அம்மா! நீங்கள் யாரென்று நான் தெரிந்துகொள்ளலாமோ? உங்களுக்கும் இவ் வீட்டிற்கு குடிவந்திருப்பவருக்கும் ஏதேனும் உறவுண்டோ?" என்று விசாரிக்கவே, அக் கிழவி,

"கிடையாது. நான் அவருக்கு சமைத்துப்போடுவதற்காக வந்திருக்கிறேன். அவருக்கு கிளப்பில் சாப்பிட சௌகர்யம் இல்லையாம். ஆகையால் தனக்கு சமையற்

கார அம்மாள் ஒருவள் வேண்டுமென்று மாயவரத்திலிருக்கும் தன் மாமாவிடம் சொல்லியிருந்தாராம். அவர் என்னை ஏற்பாடுசெய்து தன் பிள்ளையாகிய இந்த முத்துஸ்வாமியுடன் அனுப்பினார். நாங்கள் இருவரும் இன்று மத்தியான்னம் 4 மணிக்குத்தான் வந்தோம். ஆமாம்—" என்று பேசிக்கொண்டிருக்கையில், "பாட்டி! பாட்டி!" என்ற சப்தம் வரவே, அக் கிழவி, "இரு. இதோ வந்துவிட்டேன்" என்று கூறியவண்ணம், உள்ளே ஓடினாள். சற்றுநேரத்திற்கெல்லாம், அவள், மறுபடியும் திரும்பி வந்து, செல்லம்மாளை நோக்கி பிரியத்துடன்,

"அம்மா! அவர் உன்னைக் கூப்பிடுகிறார். உன்னிடம் என்னமோ சொல்லவேண்டுமாம்." என்று கூறவே, அம் மங்கை முதலில் தயங்கினாள். பிறகு, "பக்கத்தில் இந்தப் பாட்டி இருக்கும்பொழுது நாம் போவதில் பிசகில்லை." என்று நினைத்தவள்போல், அவளுடன் சென்றாள். வழியிலிருந்த ஒரு பெரிய ஹாலில், ஒரு தூணில், பார்த்ததுமே நடுநடுங்கத்தக்க, கோம்பை நாய் ஒன்று கட்டப்பட்டிருந்தது. ஆஹா! அது அம் மங்கையைப் பார்த்ததும் உடனே அவள் மிகவும் நல்லவளென்பதைத் தெரிந்துகொண்டது போலும். ஏனெனில், அது அப் பெண்மணி எதிர்பார்த்ததுபோல் குலைக்காமல் சந்தோஷத்துடன் தன் வாலை ஆட்ட ஆரம்பித்தது.

செல்லம்மாள், கிருஷ்ணமூர்த்தியின் அறைக்குள் நுழைந்தபொழுது, அவ் வாலிபன், ஒரு கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தான். அவன், அம் மங்கை உள்ளே நுழைந்ததும், மெள்ள தன் தலையைத் திருப்பி, மரியாதையுடன் அவளை நோக்கி,

"அம்மா! அந்தக் கிழவன் முருகனுக்கும் ஜுரம் வந்துவிட்டதாம். ஆகையால் உன் தமயனை தயவுசெய்து வந்து அவனையும் பார்க்கச்சொல்லு." என்று தாழ்ந்த குரலில் கூறினான். செல்லம்மாள், நாணத்துடன் தன் கடைக் கண்பார்வையை அவன் பக்கம் செலுத்தி, புன்முறுவல் செய்தவண்ணம், "சொல்லுகிறேன்." என்பதற்கு அடை



யாளமாகத் தன் சிரத்தை ஆட்டினாள். பிறகு, கல்வியையும் உதாரகுணத்தையும் எடுத்துச் சொல்லிய அவ் வாலிபனுடைய களங்கமற்ற முகத்தை நன்றாய்ப் பார்த்ததும், "இதென்ன? எனக்கு ஒன்றும் புரியவில்லையே. இவரைப் பார்த்தால், பரம யோக்கியர்போலவும் ஒரு பெரிய நற்குடியில் பிறந்து வளர்ந்தவர்போலவும் இருக்கிறதே. இவருக்கும் வெளியே அக் கதவின் பூட்டைத் திருட்டுத்தனமாய்த் திறந்து பார்த்தவனுக்கும் எப்படி சிநேகம் இருக்கக்கூடும்? ஒருக்கால் இவருக்கு அவன் எவ்வளவு அயோக்கியனென்பது தெரியாமலிருக்குமோ? அப்படி இருக்குமானால், அவன் இன்று செய்த கார்யத்தை நான் இவரிடம் சொல்லவேண்டியது என்னுடைய கடமை அல்லவா?" என்று சிந்தித்தாள். ஆனால் உடனே, "இருக்கட்டும். முதலில் நான் பார்த்ததை என் தமயனிடம் சொல்லி, அவரைக்கொண்டு இவரிடம் தெரிவிக்கலாம்." என்று தீர்மானித்தவளாய், உத்தரவு பெற்றுக்கொண்டு, வெளியே போய்விட்டாள்.

ஆகவே, அன்று இரவு தன் தமயன் திரும்பிவந்ததும் செல்லம்மாள், சாரங்கபாணி செய்த கார்யத்தைப்பற்றி அவரிடம் விபரமாய்க் கூறவே, குஞ்சிதபாதம், வியப்புற்று, "நீ சொல்லும் பேர்வழி அந்த சாரங்கபாணி என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் நீ நினைப்பதுபோல் அவன் கிருஷ்ணமூர்த்தியின் நண்பனல்ல. அவனுக்கு நேற்று வரையில் இந்த சாரங்கபாணியைத் தெரியாதாம்." என்றார்.

## அத்தியாயம் 7.

மறுநாள் பிற்பகல் 2 மணி இருக்கும்.

அச்சமயம் செல்லம்மாள் தன் வீட்டில் சுமார் 35 வயதுள்ள ஒரு மாதுடன் பேசிக்கொண்டிருந்தாள். கமலாம்பாள் எனப் பெயர்கொண்ட அம் மாதைப் பார்த்ததுமே, அவள் அமங்கலி என்பதை எளிதில் தெரிந்துகொள்ளலாம்.

அவளுடைய பர்த்தாவாகிய டாக்டர் குப்புஸ்வாமி அய்யர் இறந்து தற்சமயம் கிட்டத்தட்ட 5 வருஷ காலமிருக்கும். அவர் இறந்த பிறகே நம் டாக்டர் குஞ்சிதபாதம் அவ்வூருக்கு வந்தார். எனவே, இவ்விரு டாக்டர்களுடைய குடும்பத்திற்குள் சீக்கிரம் சிநேகம் ஏற்பட்டு அது வரவர விருத்தியாய்க்கொண்டே வந்தது. கமலாம்பாளுக்கு நம் செல்லம்மாளிடம் மிகவும் பிரியமுண்டாகையால் அவள் அடிக்கடி அப் பெண்மணியின் வீட்டிற்கு வந்து அவளுடன் பேசிக்கொண்டிருப்பதுண்டு. இப்பொழுது அவர்களுடைய சம்பாஷணையைக் கவனிப்போம்.

கமலாம்பாள் :—ஏண்டி செல்லம்! முருக விலாஸுக்கு யாரோ குடி வந்திருக்கிறார்களாமே. உனக்குத் தெரியுமோ ?

செல்லம்மாள்:—தெரியும் அவர் வந்த பிறகு நான் இரண்டு தரம் அவ் வீட்டிற்குப் போகவேண்டியதாய்விட்டது.

கமலாம்பாள் :—அதென்னடீது ? நீ எதற்காகப் போனாய்? அவர்களை உனக்கு ஏற்கனவே தெரியுமோ ?

செல்லம்மாள் :—தெரியாது. இன்னும், நீங்கள் 'அவர்கள்' என்று பேச அவ் வீட்டில் பலர் இல்லை, ஒரே ஒருவர்தான். ஒரு சமையற்கார அம்மாளுடன் வந்திருக்கிறார்.

கமலாம்பாள் :—ஒருவர்தான் வந்திருக்கிறாரா ? அவருக்கு என்ன வயதிருக்கும் ?

செல்லம்மாள் :—அதிகம் இருந்தால் 24 இருக்கும்.

கமலாம்பாள் :—நீ எதற்காக அவ் வீட்டிற்குப் போனாய் ?

செல்லம்மாள் :—அனாவசியமாய்ப் போவேனா ? காரியம் இருந்ததால்தான் போனேன்.

கமலாம்பாள் :—அதென்னடி காரியம் ? ஆமாம் ; அந்தப் பிள்ளை இதுவரையில் என் கண்ணில் தென்படவே இல்லையே.



செல்லம்மாள் :—அவருக்கு உடம்பு சரியாயில்லை. மூன்றா நாள் மாடியிலிருந்து தவறி கீழே விழுந்துவிட்டாராம். அதையறிந்தேன் நான்—

கமலாம்பாள்:—(திடுக்கிட்டு) என்ன? மாடியிலிருந்து விழுந்தாரா ? இதென்ன அநியாயம் ?—

செல்லம்மாள் :—என்ன அம்மாமி ! உங்களுக்கு இப்படித் தூக்கிவாரிப்போடுகிறதே. என்ன சமாசாரம் ?

கமலாம்பாள் :—அந்த வீட்டு மாடி என்றால் எனக்கு அவ்வளவு நடுக்கம்.

செல்லம்மாள் :—அந்த மாடி என்றால் நீங்கள் நடுங்குவானேன் ?

கமலாம்பாள் :—அது ஒரு பெரிய கதை.

செல்லம்மாள் :—(ஆவலுடன்) அதென்ன கதை அம்மாமி! சொல்லக்கூடாதா ?

கமலாம்பாள் உடனே விடையளிக்கவில்லை. அவளுடைய தயக்கத்தைக் கண்ட செல்லம்மாள் மறுபடியும் அவளுடைய பயத்திற்குக் காரணமென்ன என்று வினவினாள்.

கமலாம்பாள் :—நான் சொல்லுகிறேன். ஆனால் நீ அதை உன் மனதிலேயே வைத்துக்கொள்ளவேண்டும். ஒருவரிடமும் சொல்லக்கூடாது. ஏனென்றால் அது ஒரு குடும்ப இரகஸ்யம்.

செல்லம்மாள் :—உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இருந்தால் சொல்லுங்கள். இல்லாவிட்டால் வேண்டாம்.

கமலாம்பாள்:—ஆமாம்; அந்த வீட்டின் (முருக விலாஸின்) சொந்தக்காரரை நீ பார்த்திருக்கிறாயோ ?

செல்லம்மாள் :—கிடையாது.

கமலாம்பாள்:—அவருக்கும் எங்களுக்கும் கொஞ்சம் உறவு உண்டு. ஏங்காத்தில் அவர் (குப்புஸ்வாமி அய்யர்) இருந்தபொழுது, நாங்கள் அடிக்கடி அவ் வீட்டிற்குப் போவதுண்டு. அவ் வீட்டின் சொந்தக்காரராகிய

அனந்தராமய்யர் மாயவரத்தில் வக்கீலாயிருந்தார். அவர் மகா மானி. அவருக்கு முதலில் இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். அதில் மூத்தவனுடைய பெயர் ராமஸ்வாமி. அவனை நாங்கள் எல்லோரும் ராமு என்று அழைப்பது வழக்கம். அவன், சிறுவயதிலிருந்தே சரிவரப் படிக்காமல், தத்தாரிகளுடன் சேர்ந்துகொண்டு, கெட்டவழியில் பிரவேசிக்கவே, அனந்தராமய்யர், அவனை மாயவரத்தில் வைப்பது பிசகென்று நினைத்து, தன் நிலங்களையாவது பார்த்துக் கொள்ளட்டுமென்று, இவ்வூரில் வைக்க ஏற்பாடு செய்தார். அவனுக்கு சமைத்துப்போட அயிலாண்டம்மாளென்ற ஒரு கிழவியையும் அவனுடன் அனுப்பினார். ராமு இவ்வூருக்கு வந்தபொழுது அவனுக்கு சுமார் 19 வயதிருக்கும். ஆனால் அவன் இங்கு வந்த பிறகும் ஒழுங்காயில்லை. அப்பொழுது இந்த ஊரில் பக்கிரிசாமி என்ற ஒரு சண்டாளன் இருந்தான். ராமு, அவனுடன் சேர்ந்து, மடைபடியும் அழிய ஆரம்பித்தான். இது வெகுகாலம் வரையில் அனந்தராமய்யருக்குத் தெரியாமலிருந்தது. பாவம்! அவர் தன் பிள்ளை திருந்திவிட்டானென்று நினைத்து அவனுடைய கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தார். ஆனால் கடைசியில் அது எப்படியோ அவருடைய காதுக்கும் எட்டிவிட்டது. அவர் ஒருநாள் திடீரென்று மாயவரத்திலிருந்து புறப்பட்டு இங்கு வந்தார். வாஸ்தவத்தில் தகப்பனுக்கும் பிள்ளைக்கும் என்ன நடந்ததென்பது எனக்குத் தெரியாது. அன்று இரவு சுமார் 9 மணி இருக்கும். இதே முருகன் எங்களுடைய வீட்டிற்கு ஓடிவந்து அவரை (டாக்டர் குப்புஸ்வாமி அய்யரை) அழைத்துக்கொண்டு போனான். அவர் பிறகு திரும்பிவந்ததும் ராமு அவ் வீட்டின் மாடியிலிருந்து கீழே விழுந்துவிட்டதாகவும், அவன் பிழைக்க மாட்டானென்றும் என்னிடம் சொன்னார். ஆனால் அவன் அவ்விதம் கீழே விழுந்தானென்பதை வெளியிடாமலிருக்குமாறு அனந்தராமய்யர் அவனைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாராம். [illegible] இறந்து விட்டான். அனந்தராமய்யர் கேட்டவர்களுக்கெல்லாம் அவன் ஹிருதய சம்பந்தமான ஒரு வியாதியினால் திடீரென்று இறந்துவிட்டதாகச் சொல்லிவிட்டார். இன்னும், அந்தப் பிள்ளை இறந்த பிறகு, அவர் இந்த ஊருக்கு வரவே இல்லை. அவன் இறந்தது முதற் கொண்டு, சமீபத்தில் இந்தப் பிள்ளை (கிருஷ்ணமூர்த்தி) வந்தவரையில், அவ் வீடு காலியாயிருந்ததென்பது உனக்கே தெரியும். ஆகவே, இந்தப் பிள்ளையும் வந்த மறுநாளே அதேவிதம் மாடியிலிருந்து கீழே விழுந்துவிட்டானென்று நீ சொன்னதும், எனக்கு அந்த ஞாபகம் வந்துவிட்டது.



செல்லம்மாள் :—ஆமாம்; அனந்தராமய்யருடைய மற்றொரு பிள்ளை இப்பொழுது எங்கே இருக்கிறார்?

கமலாம்பாள் :—பம்பாயில் இருப்பதாகக் கேள்வி. நான் இதுவரையில் அவனைப் பார்த்ததில்லை— (என்று மேலே பேசுமுன், அதுவரையில் வெளியில் போயிருந்த டாக்டர் குஞ்சிதபாதம் வரவே, அவள் தன் வீட்டிற்குப் போய்விட்டாள்.)

அவள் சென்றதும், செல்லம்மாள் தன் தமயனிடம் சென்று,

"அண்ணா! முருகனைப் பார்த்தாயோ? அவனுக்கு இப்பொழுது எப்படி இருக்கிறது?" என்று ஆவலுடன் வினவ, குஞ்சிதபாதம்,

"பார்த்தேன். இப்பொழுது கொஞ்சம் தேவலை. ஆமாம்; அவனுக்கு மருந்து கொடுத்தனுப்பவேண்டுமே. நீ கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு அவனைப் பார்த்து விட்டு வருகிறாயா?" என்று கேட்கவே, அம் மங்கை,

"ஆகட்டும். சரி; நீ அந்த சாரங்கபாணி செய்த காரியத்தைப்பற்றி அவரிடம் சொன்னாயோ?" என்று வினவினள். குஞ்சிதபாதம்,

188787
தியாகராஜன்
600 008

இல்லை. அதற்கு சமயம் ஏற்படவில்லை. நாளை தினம் அவரைப் பார்க்கும்பொழுது சொல்லுகிறேன். சரி; எனக்கு மறுபடியும் வெளியில் போகவேண்டும். எங்கே, காப்பி இருந்தால் கொண்டுவா." என்று சொல்லவே, அப் பெண்மணி உள்ளே சென்று காவேரி அம்மாள் தயாராய் வைத்திருந்த காப்பியைக் கொண்டுவந்து கொடுத்ததும், அதை வாங்கிக் குடித்துவிட்டு, உடனே மறுபடியும் வெளியே போய்விட்டார்.

தன் தமயன் சென்றதும், செல்லம்மாள் முருகனுடைய மருந்தை எடுத்துக்கொண்டு தானும் வெளியே சென்றாள். கடைசியில் அவள் அக் கிழவனுடைய வீட்டிற்குள் நுழைந்தபொழுது, முருகன் தன் படுக்கையில் உட்கார்ந்து கொண்டிருந்தான். அப்பொழுது அவனுக்கு ஜுரம் கொஞ்சம் தணிந்திருந்தபோதிலும், அவன் எழுந்து நடமாட முடியாத ஸ்திதியில் இருந்ததுமன்றி, அவனுடைய முகத்தில் இன்னும் ஒருவித கலவரப்பார்வை தென்பட்டது. ஆனாலும், அவன், செல்லம்மாளைக் கண்டதும், அவளை நோக்கி மரியாதையுடன்,

"அம்மா! வாருங்கள். நீங்கள் நேற்றும் வந்திருந்தீர்களென்று உங்களுடைய தமயனார் சொன்னார். ஆனால் எனக்குத் தெரியவில்லை." என்று கூறவே, அப் பெண்மணி, பிரியத்துடன்,

"ஆமாம்; வந்திருந்தேன். அப்பொழுது உனக்கு ஜுரம் மிகவும் கடுமையாயிருந்தது. சரி; நீ ஏதாவது ஆகாரம் சாப்பிட்டாயோ?" என்று விசாரித்தாள். அக் கிழவன்,

"இப்பொழுதுதான் கஞ்சி சாப்பிட்டேன். யாரோ ஒரு அம்மாள் கொண்டுவந்து கொடுத்தாள். அது யாரென்று எனக்குத் தெரியாது." என்று விடையளிக்கவே, செல்லம்மாள்,

"அப்படியா? இவ்வீட்டிற்கு குடிவந்திருக்கும் ஐயருடைய சமையற்கார அம்மாவாயிருக்கும்." என்றாள். உடனே முருகனுடைய முகம் கொஞ்சம் மாறியது. அவன், வெறுப்புடன்,

# "பால வித்யா"

## 1931௵ நவம்பர்மீ பஞ்சாங்கம்.

| தேதி | த.மீ | வார. திதி, நக்ஷத்திரம், தியாஜ்ஜியம், யோகம் முதலியன. |
|---|---|---|
| 1 | கசு | ஞாயி ஷஷ்டி சக-சரு, திரு அ-சகூ, தி ஙஅ-ஙரு, சி. |
| 2 | கஎ | திங் ஸப் ஙஅ-சசு, புன அ-உ௦, [தி உஎ-சஎ, காளாஷ்டமி, அ, சி. |
| 3 | கஅ | செவ் அஷ் ஙரு-எ, பூச கூ-சக, [தி ஙஎ-உஎ, சி |
| 4 | ககூ | புத நவ ங௦-ஙரு, ஆயி ச-உங, [தி ஙஉ-சஎ, சி |
| 5 | உ௦ | வியா தெ உரு உகூ, மக ங-கஉ, [பூர ருகூ-உச தி உ௦-௦, அ, சி, ம |
| 6 | உக | வெ ஏகா ககூ-ருகூ, உத்ர ருங-ஙரு, [தி சச-உச, திதிதுவய; ஸர்வ-ஏகா; சி; அ. |
| 7 | உஉ | சனி துவா கச-ச, ஹஸ் சகூ-உஅ, தி கங-கூ, பிரதோஷ, ம. |
| 8 | உங | ஞாயி திர அ-க௦, சித் சரு-உங, தி அ-கூ, தி ருஅ-ஙக, [ராத்திரி நரகசதுர்தசி ஸநானம், சி. |
| 9 | உச | திங் சது உ-உஉ, ● ருச-ஙங, சுவா சக-ஙகூ, சே உ உ, [தி ருச-ருங ஸோம அமா; கேதா-வி; லக்ஷ்மிகு-பூ; ம. |
| 10 | உரு | செவ் பிர ருஉ-ங, விசா ஙஅ-உஉ, தி சஎ-ருரு, கோவ-பூ, ம, சி |
| 11 | உசு | புத துவி சஎ-ருஉ, அனு ஙரு-சஉ, தி சகூ-கஎ, ◡, பி-து, சி. |
| 12 | உஎ | வியா திரு சச-ஙகூ, கே ஙங-ருக, தி ருங-ஙஎ, சி. |
| 13 | உஅ | வெ சது சஉ-உச, மூல ஙங-கூ, தி உகூ-கூ, தி ருஎ-கச, அ, சி. |
| 14 | உகூ | சனி பஞ் சக-உக, பூரா கங-உரு, சே க-௦; தி ருஉ-ருகூ, சி. |
| 15 | ங௦ | ஞாய ஷஷ் சங-ஙச, உத்ரா ஙச-ருஅ, தி சரு-உக ஸ்க-ஷஷ்; |
| 16 | க | திங் ஸப் சஉ-சகூ, திரு ஙஎ-சஎ, தி சஅ-௦எ, [அ. [விருச்-ரவி உ௦-கச; சீர-உப, அ, சி. |
| 17 | உ | செவ் அஷ் சரு-உஅ, அவி சக-சச, தி ௦-௦, சி, ம. |
| 18 | ங | புத நவ சகூ-ககூ, சத சகூ-சங, தி க-கச, சி, அ. |
| 19 | ச | வியா தெ ருங-ருச, பூரட் ருஉ-ஙஉ, தி ச-ககூ, சி. |
| 20 | ரு | வெ ஏகா ருகூ-ருகூ, உத்ரட் ருஅ-சஅ, தி ககூ-உ, ஸர்வஏகா, சி, அ |
| 21 | சு | சனி துவா கூ௦-௦, ரே கூ௦-௦, தி ஙஉ-௦, யோகீச-துவா, ம. |
| 22 | எ | ஞாய துவா ச-கரு, ரே ரு-கங, தி ௦-௦; பிரதோஷம், அ, சி. |
| 23 | அ | திங் திர கூ-க௦, அசு கக-கஎ, தி ௦-ககூ, தி ஙஎ-உகூ, சி. |
| 24 | கூ | செவ் சது கங-உகூ, ○, பர ககூ-சகூ, ❋, தி சகூ-க. [கார்-உப, தீபம், சி. |
| 25 | க௦ | புத பௌ ககூ-சஅ, கார் உக-கஎ, தி ௦-௦, ஆகாமாவை, அ, சி |
| 26 | கக | வியா பிர கஅ-ருஎ, ரோ உச-சக, தி ங-ஙங, தி ஙகூ-கஉ, ம. |
| 27 | கஉ | வெ துவி ககூ-ருஉ, மிரு உகூ-ருங, தி சஅ-கங, சி. |
| 28 | கங | சனி திரு கக-உக, திரு உஎ-சகூ, தி ருஎ-சஉ, ஸங-சது, ம, சி. |
| 29 | கச | ஞாயி சது கஎ-ருஉ, புன உஎ-ஙரு, சே க-உகூ, தி சஎ-அ, சி. |
| 30 | கரு | திங் பஞ் கரு-அ, பூச உக-கரு, தி ருஎ-உ, சி. |

(தேதி 17–30: கார்த்திகை)

| நா | | | |
|---|---|---|---|
| | 1 | விரு-சு | வியா |
| | 13 | ஸி வி | |
| | 16 | விரு-ர | |
| | 17 | தனு கு | |
| | 25 | ,, புத | |
| | 26 | ,, சுக் | |
| சனி | பு-கு | சு-ர | கே |